பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள் எட்டு

# வலம்புரி
VALAMPURI

விலைரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 10 செவ்வாய்க்கிழமை (25 - 07 - 2000) VALAMPURI ஒலி: 218

## ஜனாதிபதி நாளை நாடு திரும்புகிறார்

சிகிச்சையின் பொருட்டு லண்டன் சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நாளை நாடுதிருப்புவாரென தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் தர்மசிறி சேனனாயக்காவின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்வதற்காகவே ஜனாதிபதி சந்திரிகா உடனடியாக நாடு திரும்புவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## அமைச்சர் தர்மசிறி சேனனாயக்கா இருதய நோயால் நேற்று காலமானார்!

### இறுதிக்கிரியைசனிக்கிழமை

(அலுவலக நிருபர்)

விமானப் போக்குவரத்து சுற்றுலாத்துறை அமைச்சரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளருமான தர்மசிறி சேனனாயக்கா இருதய நோய் காரணமாக நேற்றிரவு 8.30 மணியளவில் காலமானார். அவருக்கு வயது 67. அமைச்சர் தர்மசிறி சேனனாயக்கா இருதய நோய் காரணமாக கொழும்பு நவலோகமருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு கடந்தஇரு நாட்களாக சிகிச்சை பெற்றுவந்தார். இவருக்கு அங்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட போதும் அது பலனளிக்காத நிலையில் உயிரிழந்தார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான தர்மசிறி சேனனாயக்காசுதந்திரக் கட்சி செயலாளராக இருந்து வருகிறார். சட்டக்கல்லூரி பட்டதாரியான இவர் ஒரு (8 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் தலைவர் பிரபாகரன் "வர்க்கப்" போராட்ட வீரன்!

## அவருடன் தமிழ் மக்கள் அணிதிரண்டுள்ளனர் ஜே. வி. பி. பிரமுகர் கூறுகிறார்!

(விசேடநிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உண்மையில் ஒருபயங்கரவாதி அல்ல. அவர்ஒருவர்க்கப்போராட்ட வீரன். அவரின்பின்னால் நலிந்துவாழுகின்ற தமிழ்மக்கள் அணி திரண்டு நிற்கிறார்கள். அவரின் வீரத்தை நான் பெரிதும் மதிக்கிறேன் சிங்கள மக்களும் மதிக்கின்றனர்**

இவ்வாறு ஜே. வி பி.பிரமுகரான டாக்டர் டி. ஆர். எஸ் சி. பெர்னாண்டோ பத்திரிகையாளர் மகாநாடொன்றில் தெரிவித்துள்ளார்.

சுட்டுக் கொல்லப்பட்ட ஜே. வி. பி. தலைவர் றோகணவிஜயவீராவின் நெருங்கிய சகாவான லண்டனில் வைத்திய தொழிலில் ஈடுபட்டுள்ள டாக்டர் பெர்னாண்டோ கொழும்பில் உள்ள தனது இல்லத்தில் இப் (8 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் ஆட்லறித்தளம் மாற்றப்பட்டது

நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ளஇராணுவமுகாமில் இருந்து ஏவப்படும் ''ஆட்லறி'' ஷெல் தளக இடம் மாற்றப்பட்டுள்ளதாம் தெரியவருகிறது.

எதிர்வரும் 5ம் திகதி நல்லூர் மஹோற்சவம் நடைபெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ந-7)

## மல்வத்த அஸ்கிரிய பீடாதிபதிகள் அமைச்சர்கள், ரணிலுக்குக் கடிதம்

(கொழும்பு)

''இந்நாட்டில் வாழ்கின்ற 12வீத தமிழர்களுக்கு ஒரு உபஜனாதிபதி 7வீத முஸ்லீம் மக்களுக்கு ஒரு. உப ஜனாதிபதி 74 வீதம் வாழுகின்ற சிங்கள மக்களுக்கு எத்தனை ஜனாதிபதி பதவிகள் வழங்கப்போகிறீர்கள் (8 ஆம் பக்கம்பார்க்க)

## "லங்காமுடித்த" கப்பல் விரைவில் பயணிகள்சேவையை ஆரம்பிக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்குச் செல்லவிருக்கும் பயணிகளின் வசதி கருதி ''லங்கா முடித்த'' கப்பலை இரு தடவைகள் சேவையில் ஈடுபடுத்துமாறு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் (8 ஆம்பக்கம் பார்க்க)

## நாளை பயணச்சீட்டு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையிலிருந்து பயணிகளை ஏற்றிச் செல்

இக் கப்பலுக்கான பயணச் சீட்டினைப் பெறவுள்ளோர் நாளை புதன்கிழமை

★ அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான

## இறுதிக்கட்டப் பேச்சிற்கு வருமாறு

# இறுதிக்கட்டப் பேச்சிற்கு வருமாறு ரணிலுக்கு ஜெயரத்தின அழைப்பு!

(கொழும்பு)

உத்தேச அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக பொது ஜன ஐக்கிய முன்னணி அரசிற்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே இவ்வாரம் இடம் பெறவுள்ள இறுதிக் கட்ட பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ளுமாறு எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு நேற்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டி. எம். ஜெயரத்தின தெரிவித்துள்ளார்

ரணில் விக்கிரம சிங்க

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் சட்ட மூலத்தை ஐ. தே. கட்சி எதிர்க்கும்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசினால் கொண்டு வரப்படவுள்ள உத்தேச தேர்தல் திருத்த சட்ட மூலத்தை ஆதரிக்கப் போவதில்லை என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பேச்சாளர் கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் தற்போதுள்ள 225 எம்.பிக்களின் எண்ணிக்கையை 270 ஆக அதிகரிக்க வகை செய்யும் தேர்தல் திருத்த சட்டமூலத்தையே ஐக்கிய தேசியக்கட்சி எதிர்க்கப்போவதாக அறிவித்துள்ளது. (வ)

## புலிகள தரப்பில் உயிரிழந்தோர்

பல்வேறு சம்பவங்களின் போது தமது தரப்பில் இரு பேரராளிகள் உயிரிழந்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு:

( 8ஆம் பக்கம் பார்க்க)

## நாளை பயணச்சீட்டு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையிலிருந்து பயணிகளை ஏற்றிச் செல்லும் ''சிற்றி ஒவ் றிங்கோ'' கப்பலுக்கான அடுத்த பயணச் சீட்டு நாளை வழங்கப்படவுள்ளது.

இக் கப்பலுக்கான பயணச் சீட்டினைப் பெறவுள்ளோர் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-4)

## "சனச" நலன்புரிநிலைய அகதிகள் செயலகம் முன் சத்தியாக்கிரகம்

''சனச'' தற்காலிக நலன்புரி நிலையத்தில் உள்ள சுமார் 300 அகதிகள் நேற்று வவுனியா செயலக முன்றலில் சத்தியாக்கிரகம் ஒன்றைமேற்கொண்டிருந்தனர்.

இந்த அகதிகள் தம்மை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளை நோர்வே அரசு தொடரும்!

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியில் தீர்வுகாணும் முயற்சிகளை நோர்வே அரசாங்கம் தொடர்ந்து மேற்கொள்ளும் என்று கொழும்பிலுள்ள நோர்வே தூதரக அதிகாரி

( 8ஆம் பக்கம் பார்க்க )

## கணித ஒலிம்பிக் போட்டியில் தமிழ் மாணவன் உமாசங்கர்!

(கொழும்பு)

கொரியாவில் நடைபெறும் கணித ஒலிம்பிக் போட்டியில் இலங்கை அணி சார்பாக தமிழ் மாணவனான து. உமாசங்கர் பங்குபற்றி வருகிறார். இம்மாதம் 16 ஆம் திகதியில் இருந்து 26 ஆம் திகதி வரை நடைபெறும் இப்போட்டிக்கு உலகின் பல நாடுகளிலும் இருந்து மாணவர்கள் பலர் (8 ஆம் பக்கம் பார்க்க)

★ யுத்தக் கைதிகளைப் பார்வையிட அனுமதி கோரி

# கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி படைவீரரின் உறவினர் நடத்தினர்!

(கொழும்பு)

விடுதலைப்புலிகளினால் யுத்தக் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ள இராணுவத்தினரையும் மற்றும் கைதிகளையும் வன்னி சென்று பார்வையிடுவதற்கு அனுமதிக்குமாறு நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று யுத்தத்தின் போது காணாமல் போன படைவீரரின் உறவினர்களினால் நடத்தப்பட்டது.

மகாவலி கேந்திர நிலையத்

(8ஆம்பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இளம் சைவப் புலவர் பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தால் நடாத்தப்படும் இளஞ்சைவப் புலவர் பரீட்சையில் சித்தியடைந்தோர் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவை பின் வருமாறு:

இரண்டாம் பிரிவு

செல்வி க; இராகினி, மல்லாகம்
செல்வி தி. றூபி, சண்டிலிப்பாய்
பொ. சந்திரவேல், ஏழாலை
து ஜெயதேவன், தாளையடி
செல்வி ஐ. சித்திரா, அளவெட்டி
க. குணரத்தினம், வரணி
சி. முகுந்தன், பருத்தித்துறை
செல்வி க தேவகி, ஏழாலை
சிறீ மதன மோகனராஜ், ஏழாலை
செல்வி சி. சிவரஜனி, ஏழாலை
செல்வி கி. சசிகலா, அளவெட்டி
சி. வசந்தகுமார், கரவெட்டி
செல்வி க. கலைவாணி, சுன்னாகம்
செல்வி த,மூதினி, உரும்பிராய்
செல்வி தா. பக்தமீரா, யாழ்ப்பாணம்
வே. கமலேஸ்வரன், கந்தர்மடம்
செல்வி கோ. ஜெயந்தி, கொக்குவில்
திருமதி ச. தயாநிதி, நீர்வேலி
நி. பவானந்தசர்மா, சங்கானை
செல்வி சு. மனோரஞ்சனி, வட்டுக்கோட்டை
செல்வி தி. வரதவாணி, அளவெட்டி
நா. சனாதரன், நாவற்குளி
செல்வி இ. றமணப்பிரியா, சுன்னாகம்
செல்வி ப. கோமதி, சண்டிலிப்பாய்
செல்வி நா. ஜெயகௌரி, நீர்வேலி
செல்வி ந, தயாளினி, கந்தர்மடம்
செல்வி ச. நாகேஸ்வரி, கந்தர்மடம்
க. வே. செல்வக்குமார், வரணி
பா. சர்வேஸ்வரசர்மா. இணுவில்
செல்வி ந. லலினா, நல்லூர்
செல்வி வி. பராசக்தி, நீர்வேலி
செல்வி அ. மீனாலோசினி, கொழும்புத்துறை
கு. அரசேஸ்வரன், யாழ்ப்பாணம்
செல்வி யோ. யோகரூபி, யாழ்ப்பாணம்
செல்வி நா. பன்னீர்செல்வி தாவடி
செல்வி செ. இந்திரா, நீர்வேலி
செல்வி ம. ஜமுனா, கொக்குவில்

மூன்டாம் பிரிவு

அ. இராஜட்ணம், யாழ்ப்பாணம்
மா. பாலேந்திரன், அல்வாய்
செல்வி ப. சுமதி, நீர்வேலி
வே. ஜெயகுரு, சுழிபுரம்
செல்வி உ. காஞ்சனா, தெல்லிப்பழை
செல்வி ச. கலையரசி, உரும்பிராய்
அ. கருணாகரன், சுழிபுரம்
செல்வி ம சுபைதா. ஏழாலை
செல்வி த. சுபாஜினி, நெடுந்தீவு
செல்வி ப. ருத்திரதேவி, தெல்லிப்பழை
அ. மனோகரன், கொக்குவில்
செல்வி கு. லலிதா, மல்லாகம்
அ. சுப்பிரமணியம், சுழிபுரம்
செல்வி கு. இருபாகினி, சுழிபுரம் (க)

# க.பொ.த(உயர்தரம்)பரீட்சைக்கு தோற்றும் மாணவருக்கு அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மத்திய கல்லூரியில் க.பொ.த(உயர்தரம்)பரீட்சைக்கு அனுமதி அட்டை வழங்கும் வைபவம் நாளை 26ஆம் திகதி புதன் கிழமை காலை 8.30மணிக்கு(புதிய நேரம்) நடைபெறவுள்ளதாக மேற்படி கல்லூரி அதிபர் க.இராசதுரை தெரிவித்துள்ளார்.

அவர் இதுதொடர்பாக மேலும்தெரிவிக்கையில்; மேற்படி அனுமதி அட்டைகள் பெறும் சகலமாணவர்களும், சீருடையுடனும், உரிய அடையாள அட்டையுடனும் தத்தமது தாய் அல்லது தந்தையுடன் சமுகமளிக்குமாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் பரீட்சைக்குத்தோற்றும் மாணவர்கள் பதிவிற்காகஇன்று அடையாள அட்டையுடன் வருகை தருமாறும் அதிபர் தெரிவித்துள்ளார். (க)

# போதைப் பொருள் கடத்தல்காரரை தேடி பொலிஸார் தீவிரவேட்டை

(கொழும்பு)

போதைப் பொருள் கடத்தல்காரர் நால்வரைத்தேடி, கைது செய்யும் முயற்சியில் பொலிஸார் தீவிர கவனம் செலுத்திவருகின்றனர்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் போதைப் பொருள்கடத்தும்முயற்சியின் போது அண்மையில் கைது செய்யப்பட்ட ஒருவர் மூலம் மேற்படி நான்கு முக்கிய போதைப்பொருள் கடத்தல் நபர்கள்தொடர்பானவிபரங்களையும் பொலிஸார் பெற்றுள்ளனர்.

தற்போது இவர்கள் தலைமறைவு வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தாலும் நாட்டைவிட்டு வெளியேறாத வகையிலும் கைது செய்வதற்கும் தீவிர முயற்சிகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து இம் முக்கிய கடத்தல் நபர்கள் ஏராளமான போதைப் பொருளினை உள் நாட்டுக்குள் கடத்தியிருப்பதும் தெரிய வந்துள்ளது.

இதேசமயம், தாம் மேற்கொண்டுவரும் தீவிர நடவடிக்கைகள் மூலம் இவர்கள் அனைவரும் சரணடையக் கூடும் என எதிர்பார்ப்பதாகவும் போதைப்பொருள் கடத்தல் தடுப்பு பிரிவைச்சேர்ந்த பொலிஸார் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (உ)

# சாவகச்சேரியை சேர்ந்த நபரை பல மாதமாகக் காணவில்லை

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரியை சேர்ந்த நபர் ஒருவர் மே மாதம் 21 ஆம்திகதிமுதல் காணவில்லை என்று உறவினர்காளால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

சந்திர புரம் மட்டுவில் வடக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த 45வயதான செல்லர் செல்வராசா தனது வீட்டில் இருந்து. கனகம் புளியடி பகுதிக்கு சீவல் தொழிலுக்கு சென்ற சமயம் காணாமல் போய்விட்டாதாக முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது: (க-12)

# வவு. அரச அதிபர் அலுவலகம்முன் உண்ணாவிரதப்போராட்டம்

(வவுனியா)

வவுனியா ஜனச என்ற தற்காலிக நலன்புரி நிலையத்தில் தங்கி இருக்கும் 300 பேர் தம்மை வெளியே சென்று குடியமர அனுமதிக்கக்கோரி நேற்று வவுனியா அரச அதிபர் பணிமனை முன்பாக உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இத் தற்காலிக நலன் புரி நிலையத்தில் முன்புதங்கியிருந்தபலர் திருகோணமலை மன்னார் மட்டக்களப்பு போன்ற இடங்களில் குடியேற அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இது போன்ற, இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் இருந்து வந்து கடந்த 3 மாதங்களாக தங்கியுள்ள தம்மை, தாம் விரும்பும் இடங்களிற்கு சென்று குடியேற அனுமதித்தால் சுய தொழில்களில் ஈடுபட்டு தமது பொருளாதரத்தினை உறுதிப்படுத்த இயலும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்திருந்த போதும் கோரிக்கை நிறைவேற்றப்படாதை அடுத்தே உண்ணாவிரப் போராட்டத்தில் இறங்கியிருப்பதாக தெரியவருகிறது.

இதேவேளை,

மேற்படி மக்களை தற்காலிக நலன் புரி நிலையத்தில் இருந்து வேறு இடங்களுக்கு அனுப்பி வைக்க தமக்குமேலிடத்து உத்தரவு தேவை எனவும்.

இந் நலன்புரி நிலையத்திலேயே தொடர்ந்தும் தங்க வைக்கும் படி தமக்கு பணிப்புரை விடுக்கப்பட்டிருப்பதாகவும் வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் ரகுநாத பிள்ளை தெரிவித்துள்ளார். (உ)

# வசதிகளற்ற நிலையில் இடம் பெயர்ந்தோர்

(செம்பியன்பற்று)

அண்மையில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களால் வடமராட்சி கிழக்கு மற்றும் தென்மராட்சிப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வடமராட்சிபகுதியிலுள்ள தேவாலயங்களில் தங்கியிருக்கும் மக்கள் அடிப்படை வசதிகள் ஏதும் இல்லாதநிலையில்பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இல்வாலயங்களில் மக்கள் மிகவும் நெருக்கமாக இருப்பதனால் சிறுவர்கள் மத்தியில் தொற்று நோய்கள் இலகுவாகப் பரவுகின்றன.

இடம் பெயர்ந்து இன்னல்களை அனுபவிக்கும் மக்களின் வாழ்க்கை இத் தொற்று நோயினால் அவதிப்படும் இம் மக்களின்வாழ்வுகேள்விக் குறியாகிஉள்ளது.

# விண்ணப்பங்கள் கோரல்

(இணுவில்)

அகில இலங்கை சைவ புலவர் சங்கத்தினால் சைவப் புலவர், இளம் சைவ புலவர் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்ப படிவங்களை பூர்த்தி செய்து இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பு தேர்வு செயலாளருக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-49)

# முட்டை விலை அதிகரிப்பு

[யாழ்ப்பாணம்]

முட்டையின் விலை தற்போது அதிகரித்துக்காணப்படுகிறது:

5 ரூபா வரையில் விற்பனையான முட்டையின் விலை தற்போது ரூ 9·50 ஆக அதிகரித்துள்ளது. (உ)

# இலவசப்பாடநூல் விநியோகம்

(மந்திகை)

வடமராட்சி கல்விவலய பாடசாலைகளுக்கான இலவசப் பாடப்புத்தகங்கள் விநியோகிக்கப்படுவதாக வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ். சிவராசா தெரிவித்துள்ளார்;

பாடசாலை அதிபர்கள் தமக்குத் தேவையான புத்தகங்களை பெற்றுக்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-23)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜூலை மாதம் 23 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகின்றது.

சங்கானை

| | |
|---|---|
| 139816 ஏ | 146496 ஏ |
| 146496 பி | 146496 சி |
| 146496 டி | 147147 ஏ |
| 147147 பி | 147147 சி |
| 150347 ஏ | 150347 பி |
| 150429 ஏ | 150429 பி |
| 153345 ஏ | 153367 ஏ |

சாவகச்சேரி

| | |
|---|---|
| 153068 ஏ | 153069 ஏ |
| 153089 ஏ | 153089 பி |
| 153089 சி | |

நல்லூர்

| | |
|---|---|
| 143830 ஏ | 143830 பி |
| 143830 சி | 147423 ஏ |
| 150329 ஏ | 153275 ஏ |
| 153275 பி | 153275 சி |
| 153282 ஏ | 153282 பி |
| 153282 சி | 153282 டி |
| 153282 ஈ | 153286 ஏ |
| 158286 பி | 153286 சி |
| 153287 ஏ | 153287 பி |
| 153305 ஏ | 153315 ஏ |

சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 142094 ஏ | 142094 பி |
| 142094 சி | 142094 டி |

| | |
|---|---|
| 147232 ஏ | 147232 பி |
| 147232 சி | 148283 ஏ |
| 148283 பி | 153319 ஏ |
| 153319 பி | 153329 ஏ |
| 153329 பி | 153329 சி |
| 153330 ஏ | 153421 ஏ |
| 153421 பி | |

தெல்லிப்பழை

| | |
|---|---|
| 142105 ஏ | 144190 ஏ |
| 144190 பி | 146498 ஏ |
| 153289 ஏ | 153426 ஏ |
| 153426 பி | |

உடுவில்

| | |
|---|---|
| 131852 ஏ | 135904 ஏ |
| 135904 பி | 141811 ஏ |
| 141811 பி | 143825 ஏ |
| 143825 பி | 143825 சி |
| 143825 டி | 143914 ஏ |
| 143914 பி | 143915 ஏ |
| 143915 பி | 143915 சி |
| 143915 டி | 146347 ஏ |
| 147392 ஏ | 147392 பி |
| 147392 சி | 147392 டி |
| 147392 ஈ | 150350 ஏ |
| 150455 ஏ | 150455 பி |
| 153208 ஏ | 153242 ஏ |
| 153242 பி | 153242 சி |
| 153261 ஏ | 153261 பி |
| 153264 ஏ | 153264 பி |
| 153266 ஏ | 153266 பி |
| 153396 ஏ | 153465 ஏ |
| 153465 பி | 153465 சி |
| 153465 டி | |
| 153475 ஏ | 153475 பி |
| 153475 சி | |

(சு)

# இடம் பெயர்ந்த (தனிப்பட்டோருக்கான) க.பொ.த. [உயர்தரம்] பரீட்சை அனுமதி அட்டைகள் யாழ். தபாலகத்தில்

வலிகாமம் மற்றும்கொழும்புத்துறை, குருநகர் போன்ற கரையோரப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த க. பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் யாழ் பிரதம தபால் அலுவலகத்தில் உள்ளது.

இதுவரை அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளாதவர்களை அனுமதி அட்டைகளை உடன் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சியைச்சேர்ந்த பரீட்சார்திகளுக்கு அவர்கள் தங்கியுள்ள இடங்களுக்கு மேற்படி அனுமதிஅட்டைகள் அனுப்பப் பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளதும்இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளையில் யாழ். குடாநாட்டிற்கான வெளியூர் தபால்கள் நாளை புதன் கிழமை எடுத்து வரப்படவுள்ளதாகத் தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் போதியளவுமுத்திரைகள் எடுத்துவரப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. [க-3]

# பருத்தித்துறை வைத்தியசாலையில் இறப்புச் சான்றிதழ் பெறமுடியாது பொது மக்கள் பெரும் அவலம்

## வைத்தியர் பற்றாக்குறையாம்

(புலோலி)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் இறப்பவர்களினதும், இவ் வைத்தியசாலையில் வைத்து பிரேதப் பரிசோதனை செய்யப்படுபவர்களினதும் இறப்புச்சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்கு பலத்த இன்னல்களை யனுபவித்து வருவதோடு உரியகாலத்தில் இறப்புச்சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதாகவும் பொதுமக்கள் புகார் செய்கின்றனர்.

இவ்வைத்தியசாலையில் நிரந்தர மாவட்ட வைத்திய அதிகாரி ஒருவர் இல்லாமையால்மக்கள்சொல்லொணாக் கஸ்டங்களை அனுபவித்து வருவதுடன் மரணமானவர்களின் பிரேதப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு சடலங்களை வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலைக்கு மாவட்ட வைத்திய அதிகாரியிடம் கொண்டு செல்ல வேண்டியஅவலநிலையும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான பொது மக்களின் அவலநிலையை நீக்குவதற்கு சுகாதாரதிணைக்களம் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது கண்டிக்கப்பட வேண்டியதாகும்எனப்பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (க-52)

# பிறர் துன்பங்களில் பங்கேற்காதோர் தேவாரம் படிப்பதால் பயன் இல்லை

## ஓய்வு பெற்ற கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பிறர் துன்பங்களில் பங்கு கொள்ளாதவர்களுக்கும்நான் என்ற மமதையை அடக்காதவர்களும் தேவாரம் படிப்பதால் பயனேதும் ஏற்படப் போவதில்லை. சித்தர்பாடல்கள் இதனையே தெளிவாக வலியுறுத்துகின்றன.

மேற்கண்டவாறு இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர் திரு. கோ. சி. வேலாயுதம் தெரிவித்தார்.

திருநெல்வேலியில் நடைபெற்ற பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலைய குரு பூர்ணிமா நிகழ்வில் கலந்து உரையாற்றிய அவர் தொடர்ந்து கூறுகையில்,

அரிய மானிடப் பிறவியைப் பேறாகப் பெற்றவர்கள்ஞானமும் கல்வியும் நயந்து பெற வேண்டும்.

பாபா காட்டிய வாழ்க்கை நெறிக்கு உந்து சக்தியாக அன்பு, அருள், நீதி என்பன எம் மக்களால் பெரிதும் பேணப்பட வேண்டும்.

பசித்தோர்முகம் பார்த்தல் இழைத்தோர் இன்னல்களுக்கு உதவுகரம் நீட்டல் என்பன இறைபணிஎன்பகனை சைவ சமயிகள் ஒருபோதும் மறக்கக்கூடாது.

''அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்'' என்பதை உணரும் போதும், அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார் என்னும் போதும் அன்புமயமான இறைவனைக் காண முடிகிறதல்லவா?

அருள் என்கின்ற பாசப் பிணைப்பு மக்களிடை இருக்க வேண்டும், தபாற்தலையின் பின்புறத்தே இருக்கும் பசை தபாலுறையை ஒட்டிக் கொள்கிறபோதே திருமுகம் உரியவரைச் சென்றடையும்.

அதேபோல — பிறவிப் பெருங் கடலைக் கடந்து— அறவாழி அந்தணன் தாள் சேரவேண்டுமாயின் அருள் ஒழுகும் அகத்தராய் வாழ்க்கை நெறி நகரவேண்டும்.

இதன் உட்பொருள்களை கருத்திற் கொண்டே சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை என்னும் ஐந்து வழிகளை அறிவுறுத்துகிறார் பாபா.

ஐம்புல வேடர்கள் அயர்ந்து விளையாடும் பொய்யாகிய இந்த மெய்யில் உறைந்துள்ள ஜீவன் முக்தியின் பத்தைப் பெற நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் என்றும் இறைதாள் நினைக்க வேண்டும்.

அவனை மறந்த நேரம் இறந்த நேரத்துக்குச் சமன் என்பதை உணரவேண்டும்,

அவதார புருஷர்கள் எமக்கு ஆற்றுப்படுத்தும் பாதையில் மன்பதைக்கு பயனுள்ள வாழ்வை வாழக்கற்போம், அன்புமயமாய், அருள் வடிவாய் நீதியை உணர்வோம்.

பெருமளவு அடியவர்கள் இவ் வைபவத்தில் கலந்து கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## மட்டுவிலில் கைவிடப்பட்ட கார் உரியவரிடம் ஒப்படைக்கவில்லை

(தென்மராட்சி)

மட்டுவில் பகுதியில் பிரபலமான வைத்தியர் ஒருவரின் வீட்டில் கை விடப்பட்டிருந்த நிலையில்இருந்தமோட்டார்க் காரை அங்கு இருந்து நீர்வேலித் தரவை ஊடாக வலிகாமம் பகுதிக்குக் கொண்டு வந்தவர்கள், அக்காரை குறித்த வைத்தியரிடம் இன்னமும் ஒப்படைக்கவில்லை. எனத் தெரியவருகின்றது.

இதுபற்றி மேலும் அறியப்படுவதாவது குறித்த வைத்தியரின் அனுமதியின்றிக் கொண்டுவரப்பட்ட காரைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி வைத்தியர் சம்பந்தப்பட்டவரிடம் பல தடவைகள் கேட்டிருந்த போதிலும் கூட, கார் ஒப்படைக்கப்படாமல் இருப்பதுடன், கொண்டு வந்தகூலியாக சுமார் 20 ஆயிரம் ரூபா தரும்படி கேட்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

அத்துடன் வைத்தியர் வீட்டில் இருந்தபல எலக்ரோனிக் பொருட்களும்சம்பந்தப்பட்டவர்களால் கொண்டுவரப்பட்டு மிகவும் மலிவு விலையில் விற்கப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

குறித்த கார் வலிகாமம் பகுதியிலுள்ள கராஜ் ஒன்றில் திருத்த வேலைகளுக்காக கழற்றப்பட்ட நிலையில் காணப்படுவதாகவும் தெரிய வந்துள்ளது. (க-77)

## மல்லாகத்தில் திருட்டு மக்கள் அதிருப்தி

(இணுவில்)

வீட்டில் உறக்கத்திலிருந்த வேளை ஓடு பிரித்து உள்ளிறங்கிய திருடர் உடுபிடவைகள் மற்றும் துவிச்சக்கரவண்டியையும் திருடிச் சென்றசம்பவம் மல்லாகம் நீதி மன்ற வீதியில் உள்ள ஒரு வீட்டில் இடம் பெற்றது.

சமீப நாட்களாக இப்பகுதியில் இருட்டு குறைந்து வந்த போதிலும் தற்போது இத்தகைய சம்பவங்கள் இடம் பெறுவது குறித்து பொது மக்கள் மத்தியில் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (க-49)

## யாழ். நகர வீதிகளில் களை கட்டும் மீன் வியாபாரம்

(ஈச்சமோட்டை)

யாழ். நகரின் பல இடங்களில் சட்டவிரோதமாக தெரு வோரங்களிலும், சந்திகளிலும் மீன் வியாபாரிகள் நடமாடும் சந்தைகளை ஏற்படுத்தி வியாபாரம் செய்கின்றனர்.

டிப்பகுதிகளில் இச்சீர் கேட்டை நேரடியாகவே காண முடிகின்றது.

இப்பகுதிகளை அண்மித்து ஆலயங்களும் வழிபாட்டுஸ்தலங்களும் இருப்பதோடு அயலிலுள்ள குடிமனை வாழ் மக்களின் இயல்பு வாழ்க்கை

## தீர்த்தப் பந்தல்

(துன்னாலை)

கரவெட்டி நெல்லியடிமூத்த விநாயகர் ஆலயத் தீர்த்தக்

## யாழ். செயலக சிற்றுண்டிச்சாலை பாரபட்சமாகச் செயற்படுகின்றதா? பொதுமக்கள் புகார்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகச் சிற்றுண்டிச் சாலை ஒருசாரரின் நலன் மட்டும் பேணும் வகையில் செயற்படுவதாகப் பாதிக்கப்பட்டோர் புகார் தெரிவித்துள்ளனர்

அங்கு விற்கப்படும் சிற்றுண்டிகள் மிகவும் தரங்குறைந்த நிலையிலும், அளவு குறைவாகவும் காணப்படுவதுடன்,அரச ஊழியருக்குநியாயமான விலையில்விற்கப்படுவதாகவும், ஏனையோருக்கு அநியாய விலையில் விற்பனை செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச ஊழியரா இல்லையா என்பதை அவரது அடையாள அட்டை மூலம் உறுதி செய்து பின்பு விலைநிர்ணயம் இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அடையாள அட்டை காட்டி சலிப்படைந்த பலர்உணவுச் சாலையிலும் தம்மை உறுதிப்படுத்தி உணவுண்ண வேண்டியநிலை குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

அத்துடன், இச்சிற்றுண்டிச் சாலையில்இவ்வாறுபாகுபாடு காட்டப்படுவதாயின், அரச ஊழியருக்கு மட்டும் என்றதோர் அறிவிப்பினை சிற்றுண்டிச்சாலை முன்னால் தொங்க விட்டால் ஏனையோர் அங்கு சென்று மனஸ்தாபத்தோடு திரும்பவேண்டிய அவசியம் இல்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேசமயம், நிறை, தரம், விலை போன்றவற்றை நீதியான முறையில் நிர்ணயம் செய்யும் யாழ்செயலகத்தின் சிற்றுண்டிச்சாலையில் இவ்வாறான நீதியற்ற செயற்பாடுகள் நிலவுகிறதாவென பலரும் அதிர்ச்சியும் கவலையும்வெளியிடப்பட்டுள்ளனர். (உ)

## பயிற்சி வகுப்புகள்

(புலோலி)

வடமராட்சி வலய முறைசாராக்கல்விப் பிரிவு, நான்கு பாடசாலைகளில் சிறுவர் செயற்திட்டப்பயிற்சி (எழுத்தறிவூட்டல் பயிற்சி) வகுப்புகளை நடாத்திவருகின்றது. அல்வாய் வடக்கு இந்து தமிழ் கலவன் பாடசாலை.வல்வெட்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை, இமையாணன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, மணற்காடு றோமன் கத்தோலிக்கதமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய நான்கு பாடசாலைகளிலுமே இச் சிறுவர் செயற்திட்ட பயிற்சிவகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. (க 52)

## விஷேட பயிற்சி நெறி

(இணுவில்)

மாகாண கல்வி அமைச்சினால் விழிப்புணர்வு அற்றவர்களின் பாடசாலையில்சேவையாற்ற கூடியஆசிரியர்களிற்கு விஷேட கல்வி சார் பயிற்சி அளிககப்படவுள்ளது.

கண்பார்வையற்ற மாணவர்களிற்கு 'பிறைல்ற்' கருத்துவப் பயிற்சியினை போதிக்க தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களிற்கும், மாணவர் வழிகாட்டல் ஆலோசனைக்கு பொறுப்பான ஆசிரியர்களிற்கும் மாகாண கல்வி அமைச்சு 3 மாத விஷேட பயிற்சிகளை வழங்கவுள்ளது.

இப்பயிற்சி நெறிவழங்கப்பட்டவுடன் விழிப்புணர்வு அற்ற மாணவர்களின் கல்விச் செயற்பாட்டில் ஏற்படும் தடங்கள் சீரமைக்கப்படும் என்று சம்பந்தப்பட்டவட்டாரங்கள் தெரிவித்தன. (த-49)

## கணனிமூலம்க.பொ.த(உ-த) விடைத்தாள் மதிப்பீடு

கணனியைப் பயன்படுத்தி, க.பொ.த(உ-த) பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்மூலம் பரீட்சை முடிவுகளை காலதாமதமின்றி இரண்டரை மாதகாலத்தினுள் வெளியிட முடியும். இதன்காரணமாக பல்கலைக் கழக அனுமதிகள் தாமதமின்றி நடைபெறும் எனவும் கல்வி,உயர்கல்வி அமைச்சரிச்சட் பத்திரன தெரிவித்துள்ளார். (த)

## இலவச மருத்துவ சிகிச்சை

(புலோலி)

மாணவர்களிற்கு பூச்சிமருந்

வோரங்களிலும், சந்திகளிலும் மீன் வியாபாரிகள் நடமாடும் சந்தைகளை ஏற்படுத்தி வியாபாரம் செய்கின்றனர்.

இதனால் வீதியோரங்களிலும் சந்திகளிலும் மக்கள் கூட்டம் ஏற்படுகின்றது. இதன்போது போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்பட்டு விபத்துக்கள் நேரிடுவதோடு, துர்நாற்றமும் துப்பரவின்மையும் இப்பகுதிகளில் ஏற்படுகின்றது.

யாழ். நக்காவீதிப்பகுதி மற்றும் நாவலர்வீதியின் அத்தியில் இப்பகுதிகளை அண்மித்து ஆலயங்களும் வழிபாட்டுஸ்தலங்களும் இருப்பதோடு அயலிலுள்ள குடிமனை வாழ் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு பெரும் அசௌகரியங்கள் ஏற்படுகின்றது.

இதுபற்றி பலதடவைகள் மக்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தியும் இதுவரையும் இதற்கான மாற்று வழிமுறைகள் செயற்படுத்தப்படாததையிட்டு மக்கள் சீற்றமடைகின்றனர்.

(க-59)

# யாழ். மாவட்டக் கூ. கி. வ. சமாசம் 1178 இலட்சம் ரூபாவைப் பெற்றுள்ளது

[தென்மராட்சி]

யாழ்.மாவட்டக் கூட்டுறவுக் கிராமியவங்கிகளின்சமாசம் இருவருடகாலத்தில் 1178 லட்சம் ரூபாவை கூட்டுறவுச் சங்கங்களிடம் இருந்து வைப்பாகப் பெற்றுளளது

இதனை அடிப்படையாகக் கொண்டுசமாசம் கூட்டுறவு சங்கங்களுக்கு நுகர்ச்சி வியாபாரம் சிறிய அபிவிருத்தி போன்ற தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் கடன்தொகைகளை வழங்கியுள்ளது. இதேசமயம் கூட்டுறவுச் சங்கங்கள் தமக்குத் தேவைப்படும் கடனைசமாசத்தில் பெற்றுவருவதன்காரணமாக பலலட்சம்ரூபாவைமீதப்படுத்தக் கூடியதாகவுள்ளது. என சமாசத்தின் பொது முகாமையாளரும் செயலாளருமான எஸ். சிவபாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

(77)

## சைக்கிள் உரிமத்தகடு பரிசோதனை

(செம்பியன்பற்று)

வடமராட்சிப்பகுதியில் உரிமத்தகடு பெறாத சைக்கிள்கள் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இதனால்உரிமத்தகடுபெறாதவர்கள் அன்றைய தினமே அதனைப்பெறுவதில் முனைப்புடன் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.

(சு-42)

## தீர்த்தப் ...

(துன்னாலை)

கரவெட்டி நெல்லியடிமூத்த விநாயகர் ஆலயத் தீர்த்தக் கேணிக்கு முன்பாக, சுவாமி தீர்த்தமாடுவதற்கு வசதியாக புதிய கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

(உ-41)

## நெடுந்தீவில் சந்தை திறப்பு

[நெடுந்தீவு]

வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபையின் நிதி உதவி மூலம் நெடுந்தீவு பிரதேச சபையினால் புதிதாக அமைக்கப்பட்டசந்தைக்கட்டடமும் வாகனத்தரிப்பிடமும் இன்று திங்கட்கிழமை 9.30 மணிக்கு திறந்து வைக்கப்படும்.

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் எ. டபிள்யூ. அரியநாயகம் தலைமையில நடைபெறும் இவ்விழாவில் ஈ.பி.டி.பி பிரமுகர்கள் நெடுந்தீவு உதவி அரச அதிபர், உள்ளூராட்சி உதவியாணையாளர். கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்க தலைவர் என பல பிரமுகர்கள் பங்குபற்றுவர்.

இதேவேளை, இன்று நெடுந்தீவு டக்ளஸ் தேவானந்த கலாசார மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டு விழாவும் இடம்பெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது

(த-உ-82)

## இலவச மருத்துவ சிகிச்சை

(புலோலி)

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ண சாரதா ஆச்சிரமம் வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவர்களுக்கும் இலவச மருத்துவ சிகிச்சை முகாமொன்றை அண்மையில் நடாத்தியது,

இச்சிகிச்சையின் போது மாணவர்களிற்கு பூச்சிமருந்துகளும் வழங்கப்பட்டன.

இவ்வாச்சிரமம் ஏனைய பாடசாலை மாணவர்களுக்கும் இலவச மருத்துவ சிகிச்சைமுகாம்களை நடாத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.

(த-52)

## மட்டக்களப்பில் குண்டுவெடிப்பு மக்கள் மத்தியில் பதற்றம்

[மட்டக்களப்பு]

கறுப்பு ஜூலையை முன்விட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலைஇடம்பெற்றகுண்டுச் சத்தத்தையடுத்துபாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

இராணுவத்தினரும் பொலிஸாரும் மட்டுநகரின் பல்வேறு பகுதிகளிலும் வீதித்தடைகளை ஏற்படுத்தி தேடுதல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருந்தனர்.

வாகனங்களில் வருவோர் மீது தீவிரவிசாரணை நடத்தப்பட்டதுடன் மோட்டார் சைக்கிள்களின் பெற்றோல் தாங்கிகளும் சல்லடைபோட்டுசோதனை இடப்பட்டன.

இதனால் மக்கள் மத்தியில் பதற்றம் அதிகரித்ததுடன்நகரப்பகுதிகளில்பொதுமக்களின் நடமாட்டம் குறைவாகக் காணப்பட்டதுடன் வீதிகளும் வெறிச் சோடிக்காணப்பட்டது.

(வ-4)

## வைத்தியசாலைக்கு அன்பளிப்பு

(வல்வெட்டித்துறை)

மந்திகை ஆதார வைத்தியசாலையில் உள்ள சத்திரசிகிச்சைக் கூடத்திற்கு நெல்லியடியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான குளிரூட்டி சாதனம் ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளார்.

நெல்லியடி ம. ம. வித்தியாலய வீதியில் உள்ள மருதம் பதிப்பக உரிமையாளரான அ. சிவநாதன் என்பவரே இதனை அன்பளிப்புச் செய்துள்ளார்.

(க-16)

## இன்று ஒரு தகவல்

# தன்வினை தன்னைச் சுடும்

அது ஓர் அடர்ந்த காடு எங்கு நோக்கினும் பசுமையும், கருமையும் நிறைந்தது. அக்காட்டில் வாழ்ந்த அனைத்து மிருகங்களும் ஒன்றுக்கொன்றுமிகவும் ஒற்றுமையோடு கூடி வாழ்ந்தன.

ஆயினும் காகம் ஒன்றும் மான் ஒன்றும் மிகவும் நெருங்கிய நண்பர்களாய் வாழ்ந்து வந்தது. காகம் வானவீதியை கடந்துபோய் எங்கேனும் உணவுண்ணும். மானும் காட்டில் தன் உணவைத் தேடிக் கொள்ளும்.

இருப்பினும் இவை இரண்டும் தங்களுடைய உணவு தேடும் பணி முற்றுப்பெற்றதும் காட்டிற்கு அருகே உள்ள ஓடையொன்றுக்கு நீர் அருந்தப்போகும். அந்தக் கரையில் இருந்தே இருவரும் தாம் கண்டகாட்சிகளை ஒருவருக்கு ஒருவர் சுவாரசியமாக சொல்வது வழக்கம்.

இவர்களின் ஒற்றுமை அந்தக் காட்டிலுள்ள மற்றைய மிருகங்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. ஆயினும் பிறப்பாலே தன்னுடைய குணத்தில் பொறாமையும், வஞ்சகமும் கொண்டிருந்த நரியினால் மாத்திரம் அதனைப் பொறுக்க முடியவில்லை.

''இந்த கருங்காகத்திற்கு உடலில் வனப்பும், செழிப்பும் கொண்ட மான் தோழனா? தன்னுடைய உடல் அழகினாலும் நீண்ட கொம்பினாலும், மருட்சியான விழிகளாலும் அனைவரையும் கவரும் மான் என் தோழனானால் .........'' என்று எண்ணியவேளையிலே நரி தன்னுடைய வஞ்சகத்திட்டத்தையும் தீட்டத்தொடங்கியது.

காகம் உணவுதேடச் சென்ற வேளையில் மான் தனித்திருக்கும் அவ்வேளை நரி, மானிடம் சென்று ஏதேனும் பேசிக்கொண்டிருக்கும். நாளாக, நாளாக அவர்களிடையேயான நட்பு வளர்ந்து கொண்டுவந்தது. காகத்திடம் மான் தனது புதிய நண்பன்நரியைப் பற்றிகதை,கதையாகச் சொல்லும். ஆயினும் காகத்திற்கு நரியுடனான நட்பு பிடிக்கவில்லை. மானைப்பார்த்து ''எதற்கும் கவனமாயிரு'' என்று எச்சரித்தது. ஆயினும் தன் உற்ற நண்பன் இன்னொருவனுடன் பழகுவதை விரும்பா

வேட்டையாடுவதற்கு நான் உதவி செய்கின்றேன்'' என்றது.

வேடன் அகமகிழ்ந்தான், ஆனால் நரி வேடன்வேட்டையாடினால் அதில் தனக்கும் பங்குகிடைக்கும் என்ற ஆவலில் வேடனை காத்திருக்கச் சொல்லிவிட்டு மானை அழைத்து வருவதற்காய் காட்டிற்குள்சென்றது. மானிடம்போய் 'இந்தக்காட்டிற்கு அண்மையில் உனக்குஒரு அதிசயத்தைக்காட்டுகிறேன் வா' என்று அழைத்தது. மான் காகத்திடம் விடைபெற்று நரியுடன்சென்றது.

ஆயினும் காகம் நரியை நம்பாததால் அவர்கள் இருவருக்கும் தெரியாமல் அவர்களின்பின்னால் சென்று மரக்கிளையுள் ஒளிந்து பார்த்துக் கொண்டிருந்தது. நரி மானோடு அவ்விடம் வந்தபோது, மறைந்திருந்த வேடன் மான்மீது வலையை வீசினான், மான் பயத்தால் விறைத்துநின்றது. நரி புதரினுள் ஒளிந்திருந்தது. வேட்டைக்காய் காத்திருந்தது. மான் வலையினுள் துடிதுடித்த.து வேடன் மானினை கொல்வதற்காய் தடிதேடிச் சென்றான்.

காகம் இதனைப்பார்த்து மானிடம் 'நான்சொன்னேன் நீ கேட்கவில்லை. பார்த்தாயா? நரியின் நட்பை' என்று வேதனையோடு கூறியது. பின்னர் ''மானிடம் நீ மூச்சினை அடக்கி இறந்த மாதிரி நடி. நான் வேடன் வந்து வலையைத்தூக்கியதும் கத்துகின்றேன் நீ ஓடிப்போய் விடு'' என்றது.

வேடன் வந்து மானினைப் பார்த்தான் 'மான் இறந்து கிடக்கின்றது' என்றுகருதி வலையைஎடுத்து மடித்தான் காகம் தன் சமயோசித புத்தியைக் காட்டியது' 'காகா' என்று குரல்எழுப்பியது. மான் துள்ளிப்பாய்ந்து மறுகணமே காட்டினுள் மறைந்தது.

வேடன்ஆத்திரம்தாளாமல் தடியை மான்மீது குறிவைத்து தாக்கினான். ஆனால் அது புதரினுள் வேட்டைக்காய்ப் பதுங்கிஇருந்த நரியினைப் பதம்பார்த்தது அது கதறிய வண்ணம் அவ்வேளையே உயிர்துறந்தது.

இக்கதையின்மூலம் நாம் இரண்டினை அறியலாம். ஒருவனுடைய நண்பன்

# பாஷை என்பதுவிளக்கத்திற்காகவே கௌரவத்தை உயர்த்த அல்ல

## கொக்குவில் லயன்ஸ்கழகத் தலைவர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

வடபிராந்தியத்திலுள்ள லயன்ஸ் கழகங்களில் ஆங்கில கலாச்சாரத்தை புகுத்துவது முற்றாகத் தடைசெய்யப்பட வேண்டும், நாம் அனைவரும் தமிழர்-ஏன் ஆங்கிலத்தில் உரையாடவேண்டும். எமது மொழிக்கு நாங்களே ஆப்பு வைப்பது எவ்வகையில் பொருந்தும்? பாஷை என்பது ஒருவர் விளங்கிக்கொள்வதற்காகவே தவிர அவரின் கௌரவத்தை உயர்த்துவதற்காக அல்ல என்பதைஎமது லயன்ஸ் கழகம் புரிந்துகொள்ள வேண்டும். அது புரிந்துகொள்ளும் நாள் எப்போது உருவாகிறதோ அன்றே லயன்ஸ் கழகம் மக்கள் மத்தியில் சேவைக் கழகம் என்ற உன்னத நிலையை அடையும் என கொக்குவில் லயன்ஸ் கழக புதிய தலைவர் லயன்ஸ்க.மு. பத்மநாதன் தெரிவித்தார்,

கொக்குவில் இந்துக்கல்லூரியில் இடம் பெற்ற புதிய நிர்வாகிகள் தெரிவின்போது தலைமை உரையாற்றிய அவர் தொடர்ந்து கூறுகையில்;

எமது கழகம் வசதிபடைத்த கழகமெனவும்,எமது அங்கத்தவர்கள் வசதி படைத்தவர்கள் எனவும், பெயரளவில் நாம் சேவை செய்கிறோம், என்றுகூறிகூட்டங்கள் செயலமர்வுகள், மாநாடுகள் ஆகிய வற்றுக்கு நிறைந்த பணத்தைச் செலவு செய்து மது அருந்தி, உணவு உண்டு, களியாட்டம் நடாத்தும் கழகம் என்பது தான் வெளியில் இருந்து பார்க்கும் மக்களுக்குத் தெரிகின்றது. இந்தநிலை முற்றாக மாறி நாம் சேவை செய்வதற்காகத் தாள் கழகத்தைவழிநடத்துகின்றோம். எமது செயல்பாடுகள் மூலம் உணர்த்தவேண்டும் என்றார். (க-77)

## உதவிப்பணம் வழங்கப்படுகிறது

(மந்திகை)

பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுகளில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் மற்றும் புற்றுநோய். கசநோய்களுக்கான உதவிப் பணம் பெறுவோர்களிற்கான இம்மாதக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகிறது.

அப்பகுதிகளிலுள்ள தபாலகம் மற்றும் உபதபாலகம் என்பவற்றில் இவ்வுதவிப் பணத்தை பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது. (த-23)

## கத்திக்குத்துக்கு இளம் பெண் பலி

(பதுளை)

பதுளை ஸ்பிறிங்தோட்டப் பகுதியில் இடம் பெற்ற சம்பவம் ஒன்றில், கத்திக்குத்துக்கு இலக்காகி இளம்பெண் பலியானார்.

இச்சம்பவத்தில் இரு சிறுவர்கள் உட்பட 6 பேர் வெட்டுக்காயங்களுக்கு உள்ளான

## யாழ். குடாநாட்டில் தேர்தல்பணிகள் முழுமூச்சில்

யாழ். குடாநாட்டில் தேர்தல்களுக்கான முன்னேற்பாட்டு வேலைகள் மேற்கொள்ளப்படுவதாக யாழ். செயலக தேர்தல் பிரிவு அதிகாரியான நடராஜன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும்தெரிவிக்கையில்உத்தியோக பூர்வமாக அறிவித்தல் வந்தபின்பே முழு அளவில் பணிகள் மேற்கொள்ளப்படுமென்றும், எனினும் தேர்தல் ஒன்றை எதிர் கொள்வதற்காக வேண்டிய ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் இடம்பெயர்ந்தவர்களுக்கான வாக்களிப்பு நிலைய தொடர்பான தீர்மானம் தேர்தல் திணைக்களத்தால்மேற்கொள்ளப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (க-03)

## இடம் பெயர்ந்த மக்களுக்கான குடிதண்ணீர் வழங்க ஏற்பாடு

### ஜி. ரி. சற் நிறுவனம நடவடிக்கை

யாழ். குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலையால் இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கான உடனடித் தேவையான குடி தண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடுகளை ஜி. ரி. சற் நிறுவனம் மேற்கொண்டு வருவதாகவும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய இடம் பெயர்வுகளை எதிர்கொள்ளும் வகையில் அதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும் ஜி. ரி. சற் நிறுவன பிரதம கருத்திட்ட பொறியியலாளர் வே. நவரட்ணராஜா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், நிறுவனத்தின் வளவசதிக் கேற்பமானிப்பாய், சண்டிலிப்பாய், நல்லூர்ப் பகுதிகளுக்கு பவுசர்கள் மூலம் நீர்விநியோகப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும், பருத்தித்துறை போன்ற ஏனைய பகுதிகளில் பிரதேச சபைகள் மற்றும் பிரதேச செயலர்களின் ஒத்துழைப்

தர முகாம்களுக்கான நீர் விநியோகத்தில் உள்ள சில நடைமுறைப் பிரச்சினைகள் குறித்து செயலகத்தில் நேற்று இடம் பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் மேலதிக அரச அதிபர் து. வைத்தியலிங்கத்திடம் இது விடயம் தொடர்பாக கலந்துரையாடியாதாகவும் தெரிவித்தார்.

தற்காலிக முகாம்களுக்கான செயற்திட்டத்தின் கீழ் கொக்குவில் ஞானபண்டிதர் வித்தியாலயம், ஆனைக் கோட்டை உயரப்புலம் முகாம், ஆனைக்கோட்டை ஒ.எல். ஆர். தேவாலயம், சாவக்காடு முகாம், ஆனைக் கோட்டை சீலன் பூங்கா, மானிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை. சென் ஆன்ஸ் தேவாலயம், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் மகா வித்தியாலயம், நவாலி மகா வித்தியாலயம்.சைவப்பிரகாச வித்தியாலயம் மற்றும்வட்டுக் கோட்டை, அராலி,பருத்தித்

பன்நரியைப் பற்றி கதை,கதையாகச் சொல்லும். ஆயினும் காகத்திற்கு நரியுடனான நட்பு பிடிக்கவில்லை. மானைப்பார்த்து ''எதற்கும் கவனமாயிரு'' என்று எச்சரித்தது. ஆயினும் தன் உற்ற நண்பன் இன்னொருவனுடன் பழகுவதை விரும்பாமல் காகம் அப்படிக் கூறுவதாய் மான் எண்ணியது. உண்மையில் அது வேறு எதனையும் எண்ணி நரியினை சந்தேகிக்கவில்லை. அதன் வெள்ளை மனம் அதற்கு இடம் தரவுமில்லை.

ஆனால் நரி அந்த காட்டிற்கு அண்மையில் இருந்த வேடன் ஒருவனிடம் ''இக் காட்டில் மிகவும் அழகான மான் ஒன்று உன் வேட்டைக்கு உள்ளது. நீ அதனை தாக்கினான். ஆனால் அது புதரினுள் வேட்டைக்காய்ப் பதுங்கிஇருந்த நரியினைப் பதம்பார்த்தது அது கதறிய வண்ணம் அவ்வேளையே உயிர்துறந்தது.

இக்கதையின்மூலம் நாம் இரண்டினை அறியலாம். ஒருவனுடைய நண்பன் தோழில் கைபோட்டு முதுகில் குத்துபவனாய் இருத்தல் கூடாது.

எப்போதும் மற்றவருக்கு தீங்கிழைக்க நாம் முயன்றால் அதுநம்மையே பாதிக்கும். எம்மைப்போல் பிறரை நேசிக்கவேண்டும். விசுவாசமும், நேசிப்பும்தான் மனித வாழ்வை வளப்படுத்தும். அத்திவாரம். (த)

தென்கச்சி சுவாமிநாதன்

(பதுளை)

பதுளை ஸ்பிறிங்தோட்டப் பகுதியில் இடம் பெற்ற சம்பவம் ஒன்றில், கத்திக் குத்துக்கு இலக்காகி இளம் பெண் பலியானார்.

இச்சம்பவத்தில் இரு சிறுவர்கள் உட்பட 6 பேர் வெட்டுக்காயங்களுக்கு உள்ளான நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

(உ)

## நாட்டுக்கூத்து

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை கலைக்குயில் கலாமன்ற கலைஞர்கள் வழங்கும் (மந்திரி குமாரன் நாட்டுக் கூத்து) கடந்த 22 ஆம் திகதி நெடுந்தீவுமகாவித்தியாலயத் திறந்த வெளி அரங்கில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் அண்ணாவி அந்தோனி யேசு தாசனிற்கு நாட்டுக் கூத்து கலை மாமணி என்னும் விருது வழங்கப்பட்டது. [க]

## தேவாலயம் புனரமைப்பு

(மண்கும்பான்)

வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை ஊர்காவற்றுறை சின்னமடு தேவாலய புனர் நிர்மாண வேலைகளுக்காக இரண்டு மில்லியன் ரூபா நிதியை வழங்கி உள்ளது.

மேற்படி நிதியில் இருந்து தேவாலயபுனரமைப்புப்பணிகள் நடைபெற உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(ந-2-83)

லிப்பாய், நல்லூர்ப் பகுதிகளுக்கு பவுசர்கள் மூலம் நீர்விநியோகப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும், பருத்தித்துறை போன்ற ஏனைய பகுதிகளில் பிரதேச சபைகள் மற்றும் பிரதேச செயலர்களின் ஒத்துழைப்புடன் நீர் விநியோகப்பணி மேற்கொள்ளப் படுவதாக தெரிவித்தார்.

தற்காலிக முகாம்களுக்கே தமது திட்டம் நடைமுறைப் படுத்தப்படுவதாகவும் நிரந் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை. சென் ஆன்ஸ் தேவாலயம், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் மகா வித்தியாலயம், நவாலி மகா வித்தியாலயம், சைவப்பிரகாச வித்தியாலயம் மற்றும்வட்டுக்கோட்டை, அராலி, பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய இடம் பெயர்ந்தோர் முகாம்களுக்கும் தமது நீர் விநியோகப்பணி மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## மனித உரிமைகள் ஆணைக்குழு விரைவில் மீண்டும் யாழ்.நகரில்?

மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். கிளை மீண்டும் யாழ்ப்பாணத்தில் பழைய இடத்தில் இயங்குவதற்கான துரித நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ்.நகரில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையைத் தொடர்ந்து இடம்பெயர்ந்து பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலைக்கு அண்மையில் இயங்கி வரும் இக் குழு யாழ். நகரின் சூழ் நிலையை அனுசரித்து மிக விரைவில் யாழ்ப்பாணத்தில்இயங்கவுள்ளதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (க-12)

## வசதிகள் அற்ற நிலையில் இடம் பெயர்ந்தோர் அவதி

கைதடியில் இருந்து இடம் பெயர்ந்து தற்போது வடலியடைப்புஅரசடிநெசவுசாலையில் தங்கவைக்கப் பட்டுள்ள மூதியவர்கள் இடவசதி இன்றியும் அடிப்படை சுகாதார வசதிகள் இன்றியும் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன் இப் பராமரிப் பகத்தின் ஊழியர்களும் நிர்வாக கடமைகளில் ஈடுபட, கதிரை மேசைகள் எதுவும் இன்றி மிகவும் இக்கட்டான நிலையில் கடமை புரிகின்றனர்.

இவ் இடம் பெயர்ந்தோருக்கான உணவு மற்றும் இருப்பிட வசதிகளை ஏற்படுத்துவதில் அப்பகுதி இராம சேவகர் மற்றும் நலன் விரும்பிகள் ஈடுபட்டுவருகின்றனர் (க-13)

## தொற்றுநோய் பரவல்

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி போன்ற இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து ஆலயங்களிலும் ஏனைய பொது இடங்களிலும் தங்கியிருக்கும் மக்கள், பல சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

மேற்படி இடங்களில் சுகாதார சீரின்மை, சனம் செறிவு, போதிய வசதிகள் இன்மை போன்ற காரணங்களினால் தொற்று நோய்கள் பரவக் கூடிய நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(க-43)

## அறநெறிப் பாடசாலை ஆரம்பம்

அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயத்தில் வடமராட்சி வலய முறைசாராக்கல்விப் பிரிவினர் அறநெறிப்பாடசாலை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

பிரதி வெள்ளிக்கிழமைகள் தோறும் நடைபெறும் இவ் அறநெறிவகுப்பில் சுமார்30 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

மனிதனை வாழ்வாங்கு வாழ வைக்கக்கூடிய அறநெறிப் போதனைகள் சார்ந்தனவாக இவ்வகுப்புக்கள் நடைபெறுகின்றது. (த-52)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



பலமாத இடைவெளியின் பின்

# தொலைத்தொடர்பு நிலையம்நோக்கி மக்கள் பெருமளவில் படையெடுப்பு

(யாழ்ப்பாணம்)

பூட்டியநிலையிலும் ஒற்றைக்கதவிலும் காணப்பட்ட யாழ். நகரத் தொலைத் தொடர்பு நிலையங்கள் நேற்றுமுதல் மீண்டும் பழைய கலகலப்பைப் பெற்றிருப்பதை அவதானிக்க முடிகிறது.

மன்னார் ஊடாக நுண்ணலை மூலமும், மோட்டோறோலா இணைப்புவழி மூலமும் யாழ்ப்பாணத்துக்கும் வெளியிடங்களுக்கும் இடையிலான நேரடித் தொலைபேசிவசதி, நேற்று முதல் ஏற்படுத்தப்பட்டதை யடுத்து உள்ளூர் தொலைத் தொடர்பு நிலையங்களில் மக்கள் நடமாட்டம் மீண்டும் அதிகரித்துள்ளது.

கடந்த மேமாதம் முதல் வெளியிடங்களிலுள்ள தமது உறவினர்களுடனான தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்ட ஏராள மானவர்கள் மிகவும் குதூகலத்துடன் அவர்களுடன் தொடர்புகொள்வதை அவதானிக்கமுடிகிறது.

இதேவேளை, நீண்டகால இடைவெளியின்பின் தமது உறவுகளுடன் தொடர்பு கொள்ளும் வகையில் படையினரும் பெருமளவில், தொலைத்தொடர்பு நிலையங்களை நாடிவருவதைக் காணக்கூடியதாக உள்ளது. (உ)

## மண்ணெண்ணெய் தாராள விநியோகம்

(வண்ணார்பண்ணை)

காரைநகரில், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடந்த சில நாட்களாக மண்ணெண்ணெய் தாராளமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இதனால், வேறு இடங்களில் இருந்து காரைநகருக்கு பொதுமக்களால் எடுத்து வரப்படும் மண்ணெண்ணெய்யைப் பொன்னாலைப் பகுதிக் கடற்படையினர் தடைசெய்துள்ளனர். (உ-109)

## ஆக்கங்களை அனுப்பவும்

(அரியாலை)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையால் மாதந்தோறும் வெளியிடப்படும் 'ஞானச்சுடர்' ஆன்மீகசஞ்சிகைக்குப் பொருத்தமான, தரமான சொந்த ஆக்கங்களை சமயப் பெரியார்களிடமிருந்தும் அறிஞர், பெருமக்களிடமிருந்தும் மலர்க்குழு எதிர்பார்க்கிறது.

ஆக்கங்களை பின்வரும் முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

'மலர்க்குழு' சந்நிதியான் ஆச்சிரம சைவக்கலை பண்பாட்டுப் பேரவை, செல்வச் சந்நிதி, தொண்டைமானாறு. (க-106)

## திருடர் கைவரிசை

(மந்திகை)

அல்வாய் பகுதியில் உள்ள ஒடை பிள்ளையார் கோவிலின் உண்டியல் உடைக்கப்பட்டு அண்மையில் பணம் திருடப்பட்டுள்ளது.

அதேவேளை அப்பகுதியிலுள்ள மூன்று வீடுகளில் ஒரே நாளிலே நான்கு சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளன.

இச் சம்பவங்களைத் தொடர்ந்துஅப்பகுதி மக்களிடையே பெரும்பதட்டம் நிலவுகிறது. (த-23)

## வீதி திருத்தம் இல்லை

(சுண்டுக்குளி)

யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதிப்பாலம் சேதமடைந்த நிலையில் காணப்படுவதால், அப்பாதையால் போக்குவரத்துச் செய்வோர் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அண்மைக்கால போர் நடவடிக்கைகள் காரணமாக இவ்வீதிப் பாலம் சேதமடைந்திருப்பது குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும், இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## உலர் உணவு நிவாரணம்

(அச்சுவேலி)

கோப்பாய் பிரதேச செயலர்பிரிவுக்குட்பட்டபலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினூடாக 88 ஏ, பி புள்ளிகளிற்குரிய உலர் உணவு விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (உ-14)

# பகுதி நேர ஆங்கில ஆசிரியர் நிரந்தரநியமனம் கோரி மகஜர் சமர்ப்பிப்பு

பகுதி நேர ஆசிரியர் தமக்கு நிரந்தர நியமனம் பெற்றுத்தரக் கோரி நேற்று ஈ.பி.டி.பி. அமைப்பின் யாழ்ப்பாணத் தலைமைச் செயலகத்தில் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

பகுதி நேர ஆங்கிலஆசிரியர் சங்கக் கூட்டம் நேற்று யாழ். உயர் கலைக் கல்லூரியில் நடைபெற்றது.

ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக ஈ.பி.டி.பி. அமைப்புக்கு மகஜர் கையளிக்கும் பொருட்டு 75க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் ஊர்வலமாகச் சென்று ஈ.பி. டி. பி. அலுவலகத்தில் மகஜரைக் கையளித்தனர்.

இம் மகஜரில் தமதுநிரந்தர நியமனம் தொடர்பாகவும் க.பொ.த. உயர் தரப் புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்படும் ஆங்கிலஆசிரியர்கள் தெரிவு முறையில் குறைபாடு இருப்பதாகவும் அம் மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக அச் சங்கத்தைச்சேர்ந்த சிவநேசன் தெரிவித்துள்ளார். (ந-2)

## பெற்றோல் விநியோகம்

(வண்ணார்பண்ணை)

யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தினால் அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கு 5 லீற்றர் பெற்றோலும் 7 லீற்றர் மண்ணெண்ணெயும் வழங்கப்படவுள்ளது. (உ-109)

# வவுனியா அகதிகளுக்கு காசுக்குப்பதில் உலர்உணவு வழங்க ஏற்பாடு

யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கின்ற மக்கள் ஆறாயிரம் பேருக்கும் இம்மாதம் முதல் பணத்திற்குப் பதிலாக உலர் உணவு வழங்குவதற்குத்திட்டமிடப்பட்டுள்ளது.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் இவ்வுலர் உணவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வ)

மட்டு. தொழில்நுட்பக் கல்லூரி

# மாணவர் பகிஷ்கரிப்பு போராட்டம் நேற்று 7-வது நாளாக தொடர்கிறது

(கொழும்பு)

மட்டக்களப்பு தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்களது பகிஷ்கரிப்புப் போராட்டம் இன்று ஏழாவது நாளாகவும் தொடர்ந்து நடைபெறுகிறது.

தொழில்நுட்பக் கல்லூரியின் விரிவுரையாளரை அதிபரின் அனுமதியின்றி பொலிஸார் கைதுசெய்தமையை எதிர்த்தும், அவரை விடுவிக்கக் கோரியும் மாணவர் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் வகுப்பு புறக்கணிப்பு போராட்டம் முடிவேதும் எட்டாதநிலையில் தொடர்ந்தும் நடைபெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் மற்றும், ஊழியர்களது வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு முடிவு காணும்வகையில் நேற்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்கவில்லைஎன தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனால் தொடர்ந்தும் விரிவுரைகள் மற்றும் அலுவலகக்கடமைகள் ஸ்தம்பித நிலையிலேயே காணப்படுவதாகவும்,

ஊழியர்வருகை தருகின்ற போதிலும் தமது கடமைகளில் ஈடுபடுவதில்லையெனவும், மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கு வருகை தருவதில்லைஎனவும் தெரிவிக்கப்படுகிறது.

1998 இல் மேற்கொள்ளப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை ஒன்றின்போது அதன் தலைவர்என்ற முறையில் கலாநிதி ரி. ஜெயசிங்கம்மேற்கொண்ட நடவடிக்கைக்கு, பல்கலைக்கழக நிர்வாகம் எடுத்துள்ள ஒழுக்காற்று நடவடிக்கையை ஆட்சேபித்து கடந்த 17 ஆம்திகதி தொடக்கம் வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுவருவது தெரிந்ததே. (உ)

# உலகநாடுகளை அச்சுறுத்தும் போதைபாவனை

யினை உருவாக்கப்பட வேண்டுமானால் முதலில் போதைப் பழக்கம் உருவாகும் வழிகளைக் கண்டறிய வேண்டும். அவை சம்பந்தமான விழிப்புணர்ச்சிகளை

# உலகநாடுகளை அச்சுறுத்தும் போதைப்பாவனை

# இளைய சமுதாயத்தை மீட்க வழியேயில்லையா?

## சமூகவியலாளர் மத்தியில் குழப்பம்

போதைப்பொருள் பாவனை உலக நாடுகளை அச்சுறுத்தும் வகையில் இன்று வெகு வேகமாக பரவி வருகிறது.

வளர்ச்சியடைந்த நாடுகளில் மட்டுமல்ல இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் போன்ற வளர்முக நாடுகளிலும் பரவி இளம் சமுதாயத்தை அகல பாதாளத்திற்குள் தள்ளிவிடுகிறது.

இன்று நாளுக்கு நாள் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, மற்றும் பல செய்தி ஊடகங்களிலும் பரவி வரும் அதிசயத்தக்க செய்தி போதைப் பொருள் பற்றியதே, இளைஞர் யுவதிகள் உலகம்போதைப்பழக்கத்திற்கு அடிமையாகி இன்று திசை மாறிப் போய்க்கொண்டிருக்கிறது.

சொற்ப இன்பத்திற்காய் தற்காலிகமாய் ஏற்படுத்திக் கொள்ளும் இந்த அற்பச் செயலானது காலக்கதியின் அதற்கே அடிமையாகி வாழ்வைச் சீரழிக்கும் மிகவும் இழிவான நிலைக்கு கொண்டு செல்கிறது.

இன்றைய சூழலிலே இத்தகைய போதை இன்பத்தைக் கொடுக்கும் வஸ்த்துக்கள் பலரகமாய், பலவிதமாய் உலகெங்கும் பரவிக் காணப்படுகின்றன. கஞ்சா, அபின், ஹெரோயின் போன்ற பலவற்றை இவற்றுள் சிலவாக குறிப்பிடலாம்.

போதையைப் பெற்றுக் கொள்வதற்குப் பல மார்க்கங்கள் பல ஊடகங்கள் பயன்படுத்தப்படும் அளவிற்கு விரிவடைந்து காணப்படுவது வியந்தையளிக்கும் செய்தியே.

வில்லைகள் (குளிசைகள்) ஊசிகள், கலவைகள் என்று பல்வேறு வகையில், பல்வேறு போதையை ஏற்றிக் கொள்வதைக்காணக்கூடியதாகவுள்ளது.

போதைப் பழக்கத்திற்கு கூடுதலாக இளம் சமூதாயம் குறிப்பாக மாணவர் சமுதாயம் ஈடுபட்டுள்ளது. என்ற அதிர்ச்சி தரும் செய்தி அண்மைக் காலத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இது அனைவரையும் கவலை கொள்ளச் செய்துள்ளது. போதைப் பொருள் பாவனையின் பிறப்பிடங்களாக பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், விடுதிகள் கேளிக்கை நிலையங்கள், உல்லாசப் பயண விடுதிகள் என்பற்றில் விளங்கி வருகின்றன என்பது மற்றொரு அதிர்ச்சி தரும்செய்தி ஆகும்.

**விரக்தி நிலை**

இன்றைய உலகம் போதை நிறைந்தாக காணப்படுவதற்கு காரணங்கள் எண்ணிலடங்கா. பிழையான வழிகாட்டல், விரக்தி மனப்பான்மை, வேலையில்லாப் பிரச்சனை, சமயக் கருத்துகள் பற்றிய விழிப்புணர்ச்சியின்மை, கலாச்சாரச் சீரழிவுகள், திரைப்படங்கள், நாடுகளுக்கிடையே தொடரும் போர் அனர்த்தங்கள், தேசத்திற்கு தேசம் நிகழும் குடியகல்வு, குடிவரவுத் திட்டங்கள் போன்ற பல காரணங்களைக் குறிப்பிடலாம்.

போதைப் பழக்கம் உடல் கோளாறுகள் பலவற்றிற்கு அடித்தளமாக அமைகிறது. இதயக் கோளாறு வளர்முக நாடுகளின் மக்களிடையே புதிர் நிறைந்ததாகவும், மக்கள் வாழ்வில் திருட்டுத்தனமாக நுழைகிற நோயாகவும் விளங்குகிறது. அல் பஹ்ரெய்ன் ஆராய்ச்சி மையத்தில் செய்யப்பட்ட ஆராய்ச்சியின்படி 1984ஆம் ஆண்டிற்கு மேல் பலரும் இரத்த நாள நோய்களினால் பெரிதும் தாக்கப்பட்டனர் என்றே குறிப்பிடுகிறது. நிக்கோடின் மற்றும் கார்பன் மொனோசைட்டு போன்ற நஞ்சுகள் இரத்த நாள இறுக்கநோயை அதிகப்படுத்துகின்றன.

இவை தமனிகளின் உட்புறச் சுவர்களின் கெடுதல் உண்டாக்கும் கொழுப்பு படிமங்களை உண்டுபண்ணுகிறது.

இரத்த ஓட்டத்தை தடை செய்கின்றது. நுரையீரல்,

**தர்மினி**

சிறுநீரகம் என்பனவும் போதை வஸ்துக்களால் பாதிக்கப்படுகின்றன.

இதற்கு தேவையானது அறிவியல் பூர்வமான மாற்றமல்ல. மாறாக பொதுமக்களுக்குத் தக்கமுறையில் எளிய கல்வியறிவைப் புகட்டுதல் அறிவு பூர்வமான மக்கள் நல அணுகு முறையாகும்.

போதையினால் இருள் சூழ்ந்துவரும் இவ்வுலகிற்கு ஒளி கொடுத்து புதிய பாதை

வேண்டுமானால் முதலில் போதைப் பழக்கம் உருவாகும் வழிகளைக் கண்டறிய வேண்டும். அவை சம்பந்தமான விழிப்புணர்ச்சிகளை ஏற்படுத்த வேண்டும் அதற்கான பரிகாரங்களை தேட வேண்டும்,

**தவறான வழிகாட்டல்**

போதைப் பொருள் பாவனையானது வெளிநாடுகளிலிருந்து வரும் உல்லாசப் பிரயாணிகளின் பிழையான நடத்[illegible] வழிகாட்டாலும் பரப்ப வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே இதனை தடுக்க வேண்டும் இவ்வாறான குற்ற நடவடிக்கையில் ஈடுபடும் வெளிநாட்டவருக்கு தண்டனை அல்லது நாடு கடத்தல் போன்றவற்றை செய்வதன் மூலம் அத்தகைய நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்தலாம்,

இதே போன்று உள்நாட்டில் போதைப்பாவனையை ஊக்குவிக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் நபர்களுக்கு தண்டனை விதிக்கலாம். வெளிநாடுகள்: நாடுகளுக்கு இடையே போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுவோருக்கு எதிராக மலேசியா, சவூதி அரேபியா போன்ற நாடுகள் மரண தண்டனையை விதிப்பது போன்ற கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் இதனைத் தடைசெய்யலாம்.

இளம் உள்ளங்களை தன் அழகினாலும் அன்பினாலும் இடம் பிடித்த டயானாவின்

(நாளை தொடரும்)

## நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து நவாஸ் வழக்குத் தாக்கல் செய்வார்

(புதுடில்லி)

பாகிஸ்தான் அரசியலில் இருந்து தன்னை ஒழித்துக் கட்டும் ஒரு நடவடிக்கையாகவே தனக்கு இராணுவ ஆட்சியாளர் 14 வருட சிறைத் தண்டனை விதித்துள்ளதாகவும், 21 வருடங்களுக்கு அரசியலில் ஈடுபடத்தடை விதிக்கப்பட்டிருப்பதாகவும் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் நீதிமன்றத் தீர்ப்புக்குறித்துநவாஸ்ஷெரீப் மேலும் கருத்து தெரிவிக்கையில்; நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்வது குறித்து எனது சட்டத்தரணிகள் கூடி முடிவு செய்வார்களென்றும் அவர் கூறினார்.

இதேவேளை பாகிஸ்தான் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்வது என்றும் நவாஸ் ஷெரீப்பின் முஸ்லிம் லீக் கட்சி முடிவு செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# இந்தோவில் கலவரத்தை அடக்க ஐ.நாவின் உதவி அவசியம் இல்லை

[யகார்த்தா]

இந்தோனேஷியா மதக்கலவரங்களை அடக்க ஐ. நா உதவுவதை மறுக்கிறார் அப்துல் ரகுமான்.

இந்தோனேசியாவில் தொடர்ந்து நடைபெறும் கிறிஸ்தவ இஸ்லாம் மதக்கலவரங்களைப் போக்குவதற்கு ஐ.நா உதவிக்கு வருவதாக பொது செயலர் கோபி அனா தொலைபேசி மூலம்தொடர்பு கொண்டு பேசிய போதே அவர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

எமது உள்நாட்டுப் பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ளலாமென்றும் தமது அரசாங்கத்தால் கூடிய விரைவில் தீர்த்து வைக்கப்படுமென்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இரு அமைச்சர்களைத் தான் பதவியிலிருந்து நீக்கியதாகவும் தனக்கு அந்த உரிமை இருக்கிறது என்றும் நாடாளுமன்றத்தில் இதைச்சாட்டாகவைத்துபிரச்சினை எடுக்கிறார்களென்றும் இதில் தலையிட பாராளுமன்றத்துக்கு அதிகாரம் கிடையாதென்று அப்துல் ரகுமான் தொரிவித்துள்ளார். (ரு)

# வாழப்பாடி ராமமூர்த்தி சென்ற வாகனத் தொடர் மீது கல்வீச்சு

(சென்னை)

தமிழக ராஜீவ் காந்தி காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராம மூர்த்தியுடன் சென்ற வாகனங்கள் மீது விழுப்புரம் அருகே கல் வீச்சு நடந்ததில் நான்கு பேர் காயமடைந்தார்கள்.

விழுப்புரத்தில் நடைபெற்ற வன்னியர் சங்கஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வாழப்பாடி இராமமூர்த்தி அவரது ஆதரவாளர்களும் சென்று கொண்டிருந்த பொழுது 25 பேர் கொண்ட கும்பலொன்று கல்வீச்சில் ஈடுபட்டது.

இது விடயம் தொடர்பாக பொலிஸாரிடம் முறையிட்டதையடுத்து தீவிர நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன. (ரு)

## இந்திய எல்லைக்குள் ஊடுருவ முயன்ற மூன்று பாகிஸ்தானியர் சுட்டுக்கொலை

(புதுடில்லி)

இந்திய எல்லைக் கட்டுப்பாட்டுக்கோட்டுக்குள் ஊடுருவ முயன்ற பாகிஸ்தானிய படைவீரர் மூவரை சுட்டுக் கொன்றிருப்பதாக இந்தியப் படைத்தரப்பினர் அறிவித்துள்ளனர்.

ஜம்மு நகருக்கு 176 கிலோ மீற்றர் வடக்கே கடந்த சனிக்கிழமை 30 இற்கும் மேற்பட்ட பாகிஸ்தானிய ஊடுருவல்காரர்கள் மீது இந்தியத் துருப்பினர் மேற்கொண்ட தாக்குதலின் போதே இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் வசம் இருந்த ஆயுதங்கள் மீட்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் ஏனையோர் தமது பகுதிக்கு தப்பியோடிவிட்டதாகவும் தெரிய வருகிறது.

இச்சம்பவத்தில் இந்தியத் தரப்பில் ஒருபடைவீரர் பலியாகியதுடன் இருவர் காயமடைந்தனர் (உ)

உலக தரிசனம்

## ★ தொலைக் காட்சி மீதான தடையை நீக்குவதற்கு தலிபான் அமைப்பினர் ஆராய்வு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தொலைக்காட்சி மீதான தடையினை நீக்குவது தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் மாநாடொன்றில் எடுக்கப்பட்ட சில தீர்மானங்களின் அடிப்படையில்

இந்த வகையில் திரையரங்குகள் மூடப்பட்டதுடன் தொலைக்காட்சிப் பெட்டிகளை தலிபான் அமைப்பினர் நடுத்தெருவில் போட்டுக் கொளுத்தினர்.

இவ்வாறு இறுக்கமான வகையில் அங்கு தொலைக்காட்சி தொடர்பான கட்டுப்பாடுகள் கடைப்பிடிக்கப்

## ஈழ அகதிகளுக்கு உதவி

[புதுடில்லி]

தமிழகத்திற்கு வந்துள்ள தமிழீழ அகதிகளுக்கு தமது கட்சியினால் பல்வேறு நிவாரண உதவிகள் வழங்கப்படவிருப்பதாக மாக்ஸிஸ்ட் கம்யுனிஸ்ட்கட்சியினர் தெரிவித்துள்ளனர். (உ)

செய்திப்பரல்

செவ்வாய்க் கிரகத்தில்

## விமானத்தை பறக்கவிடும் முயற்சியில் விஞ்ஞானிகள் அதீத முயற்சி

(லண்டன்)

மனிதன், விமான மூலம் முதன்முதலாக பூமியை வலம்வந்த நூற்றாண்டு விழாவை கொண்டாடும் வகையில், செவ்வாய்க் கிரகத்தில் விமானத்தை பறக்கவிடும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

1903-ம் ஆண்டில்தான் மனிதன் முதன்முதலாக விமானமூலம் உலகை வலம்வந்தான்,

இச்சாதனையின் நூற்றாண்டுப் பூர்த்தி, வரும் 2003 இல் நினைவு கூரப்படவுள்ளது.

இதற்காகவே செவ்வாய்க் கிரகத்தில் பறப்பதற்கு ஏற்றவகையில் தனிரக விமானம் தயாராகி வருகிறது:

பரசூட் மூலம் செவ்வாயில் தரையிறங்கும் இவ் விமானம் 1200 கிலோமீற்றர் தூரம்வரை செவ்வாயின் காற்றுமண்டலத்தில் பறக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேசமயம், மனிதன் இன்றி பறக்க இருக்கும் இவ் விமானமானது கணனி மூலமே இயக்கப்படவுள்ளது.

ஏனெனில் பூமியில் இருந்து அனுப்பப்படும் சமிக்கையானது செவ்வாயைச் சென்றடைய எட்டு நிமிட நேரம் எடுக்கிறது. (உ-ரு)

## ஹெலி விழுந்து நொருங்கியதில் சிறுவன் உட்பட ஐவர் உடல் சிதறி பலி

### அவுஸ்ரேலியாவில் சம்பவம்

(கன்பரா)

அவுஸ்திரேலியாவின் வடமாகாணமான இங்லண்டில் மீட்பு ஹெலிக்கொப்டர் விழுந்து நொருங்கியதில் அதில் இருந்த 5 பேரும் உயிரிழந்தனர்.

இந்த ஹெலி கொப்டரில் உடல் நலம் குன்றியிருந்த 5 வயதுச் சிறுவனை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்காக அவனுடைய தாயாரும் 2 மருத்துவமனைப் பணியாளர்களும் பயணம் செய்தார்கள்.

ஹெலிக்கொப்டர் புறப்பட்ட உடனேயேஎரிபொருள் தீர்ந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (ரு)

## வழங்க முன்வந்த இழப்பீட்டுத் தொகையை ஏற்க செவ்விந்தியர் மறுப்பு

(ஒட்டாவா)

ளுக்கு நீதிமன்றில் மேன்முறை

தொலைக்காட்சி மீதான தடையினை நீக்குவது தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் மாநாடொன்றில் எடுக்கப்பட்ட சில தீர்மானங்களின் அடிப்படையில் தொலைக் காட்சி பாவனையை மீண்டும் ஆப்கானிஸ்தானில் கொண்டு வருவது தொடர்பாக ஆளும் தலிபான் அமைப்பின் தலைவரின் கவனத்தின் கீழ் கொண்டு வந்திருப்பதாக தெரியவருகிறது.

ஆப்கானிஸ்தானை தலிபான் அமைப்பினர் கைப்பற்றிய பின்னர், அதனை புனித முஸ்லிம் நாடாக மாற்றும் நோக்கில் தொலைக் காட்சி மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்களுக்கு தடைவிதிக்கப்பட்டிருந்தது.

தொலைக்காட்சிப் பெட்டிகளை தலிபான் அமைப்பினர் நடுத்தெருவில் போட்டுக் கொளுத்தினர்.

இவ்வாறு இறுக்கமான வகையில் அங்கு தொலைக் காட்சி தொடர்பான கட்டுப்பாடுகள் கடைப்பிடிக்கப் பட்டு வருகையில் தலிபான் அமைப்பினர் எவ்வாறான முடிவினை எடுப்பர் என்பது தொடர்பாக அறிவதற்கு பலரும் ஆவலாயுள்ளனர்.

இதேசமயம் தொலைக் காட்சிப் பாவனைக்கு அனுமதியளிக்கப்பட்டாலும் அது முழுமையானதாக அமையாதெனவும், வெறும் இயற்கைக் காட்சிகளைக் காட்ட அனுமதிக்கப்படுவதுடன் மனிதர்களின் குரலை மட்டுமே கேட்க முடியும் எனவும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ)

## இஸ்ரேலிலிருந்து ராடர் கருவிகளை கொள்வனவு செய்ய இந்தியா தயார்

(ஜெருசலேம்)

இஸ்ரேலிருந்து 50 கோடி டொலர் பெறுமதியான இரண்டு ராடர் கருவிகளை இந்தியா வாங்குவதற்கு எல்லாஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டுவிட்டன.

இஸ்ரேல் அரசுக்கு சொந்தமான விமானத் தொழிற்சாலையில் தயாரித்திருக்கும் இந்த மின்னணு ராடர் கருவிகளை வாங்குவதற்காக ரஷ்யாவில் அமைக்கப்பட்ட விமானத்தை இந்திய வாங்கி இஸ்ரேலுக்கு கொடுக்க இணங்கியிருக்கிறது.

என்ன இருந்தாலும் அமெரிக்கா இந்த ஒத்து மாறும் உடன்பாட்டுக்கு சம்மதம் தெரிவித்தால் மட்டுமே சாத்தியப் படும்என்று இஸ்ரேல் கூறிவிட்டது.

இதேவேளை சீனாவிற்கு இஸ்ரேல் விற்கஇருந்த ராடர்களும் அமெரிக்காவின் அனுமதியின்றி தடைப்பட்டதும் தெரிந்ததே. (து)

## செய்திப்பரல்

★ வட கொரியாவிற்கும் ஜப்பானுக்குமிடையில் மீண்டும் உறவுகள் நீடிக்க வேண்டும் என்று ஜப்பான் பிரதமர் கோரி தெரிவித்துள்ளார்.

★ பிலிப்பின்சில் அதிபரின் புதிய உரையை எதிர்பார்த்து நாடு உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

★ தமிழக சட்டமன்றத் தேர்தல் அடுத்த ஏப்ரல், மே மாதங்களில் இடம்பெற இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கப்படுகின்றன.

★ பிரிட்டிஷ் சாரணஇயக்கம் தமது சீருடையில் புதிய மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது.

★ ஆசியான் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் பாங்கொக்கில் நேற்று ஆரம்பமானது.

★ இந்தியப்பாராளுமன்ற மழை காலக் கூட்டத் தொடரில் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினை முக்கிய இடம் பெறுமெனச் சொல்லப் படுகிறது. (து)

இந்த ஹெலிகொப்டரில் உடல் நலம் குன்றியிருந்த 5 வயதுச் சிறுவனை மருத்துவ

தீர்ந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (து)

## வழங்க முன்வந்த இழப்பீட்டுத் தொகையை ஏற்க செவ்விந்தியர் மறுப்பு

(ஒட்டாவா)

மேற்குக் கனடாவில் வன்கோரியின் மத்திய பகுதியில் இருந்து, 80 ஆண்டுகளின் முன் குடியெழுப்பப்பட்ட பழங்குடி செவ்விந்தியர், தமக்கு நட்ட ஈடாக கனடா அரசு வழங்க முன்வந்த 60 மில்லியன் டொலர் பணத்தை ஏற்றுக்கொள்ள மறுத்து மீண்டும் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்துள்ளனர்.

செவ்விந்தியர் வசித்துவந்த மேற்படி பகுதி சுகாதாரமற்றதெனவும், நகரின் வளர்ச்சிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையிலும் அமைந்திருப்பதாகக் கூறி, கனடா அதிகாரிகள் அறுநூறு ஹெக்ரேயர் நிலப்பரப்பில் வசித்துவந்த பழங்குடி செவ்விந்தியரை கட்டாயமாக குடியெழுப்பியிருந்தனர்.

இதனை எதிர்த்து 77ம் ஆண்டில் இருந்து, பாதிக்கப்பட்டோர் நீதிமன்றில் வழக்காடி வந்ததையடுத்து இவ்வாண்டுத் தொடக்கத்தில் அவர்களுக்கு 60 மில்லியன் டொலர் இழப்பீட்டுத் தொகையாக வழங்க அரசு முன்வந்தது.

இது தமது இடப்பிரச்சினைக்குத் தீர்வாக அமைய மாட்டாதெனத் தலைவர்கள் கூறி செவ்விந்தியப் பழங்குடிகளுக்கு நீதிமன்றில் மேன்முறையீடு செய்துள்ளனர்.

இதேசமயம், 80 ஆண்டுகள் முன் இவர்கள் வசித்து வந்த பகுதி தொல் பொருள் காட்சியகங்கள், திறந்த வெளி அரங்கம் ஆகியவை அடங்கிய பூங்காவாக மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. [உ]

## ஒருநிமிடம்

உலக தரிசனத்தை உன்னிப்பாக வாசித்து வரும் உங்களுக்கு ஒரு போட்டி. இதில் கலந்து வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன.

## மண்ணெண்ணெய் விநியோகம்

[அச்சுவேலி]

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை நிறுவனங்களினூடாக பங்கீட்டு அட்டைக்குநான்கு லீற்றர் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. (க-14)

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளம் தரும் நாடு
- குறள்

# வலம்புரி

## உலகம் உருளுது தான்

தேர்தல் காய்ச்சல் பீடித்திருக்கும் இவ் வேளையில் காய்ச்சல் வேகத்தில் பிதற்றல்கள் தொடங்கிவிட்டன. நிலை தளம்பும் அரசியல் கருத்துக்களும் உலகம் உருளுவது போல் உருளத் தொடங்குகின்றன. மனித பரிணாம வளர்ச்சி பற்றிக் கூற வேண்டிய அவசியம் இலங்கைக்கு வேண்டியதில்லை.

உறுமும் கட்சிகளும், இயக்கங்களும் புற்றீசல் போல புதிது புதிதாய் கிளம்புவதும் புதியவியாக்கியானங்களை உதிர்ப்பதும் சர்வசாதாரணமாகி விட்டது. சிங்கள உறுமய தமிழன் வாழும் பிரதேசத்துக்கு அறவே உணவு அனுப்பக் கூடாது என்று கூறுவதாகச் செய்திகள் கூறுகின்றன. அக் கூற்று உண்மையாயின் ஒரு உண்மையை அவர்கள் உணர்ந்தாக வேண்டும். சுய நிர்ணய உரிமைப் போரே தொடர்ந்து இந்த நாட்டில் நிலவுகிறது. அதற்கான வழி வகைகள் புலப்பட்டால் தமிழன் தன்னைத்தான் காப்பாற்றும் திறனை பெற்றுய்வான் என்பது மறுக்க முடியாத உண்மை. கையேந்தும் நிலையை மறக்கவே அவன் கங்கணம் கட்டுகிறான். பலதியாகங்களைப் புரிகிறான். துன்பச் சுமைகளைச் சுமக்கிறான்.

அரசியல் யாப்புச் சீர்திருத்தம் என்று எல்லோரும் கூடி கயிறு இழுத்தார்கள். தேர் ஈசானிய மூலைக்கு வரப்போகிறது என்று காலம் காலமாக துன்பமடைந்த தமிழன் வயிறு குளிர்ந்தானே. நடக்கப் போவது கேள்விக்குறியாகும் நிலையில் ஏம்பலிக்க வேண்டியிருக்கிறது. உரியதை, உரிமையைக் கொடுக்க மறுக்கும் அரசியல் அஞ்ஞானங்கள் அழியும் வரை இந்த நாட்டில் நிம்மதி பிறவாது.

ஒட்டுமொத்தமாக உதவுகரம் கொடுத்து தீர்க்கப்படாதிருந்த பிரச்சினையைத் தீர்க்க முயலுவதே அறிவுடமை. இந்த நாட்டில் மதவாதிகள் அரசியலில் புகுந்து குட்டையைக் குழப்புவது ஒரு சாபக்கேடு புதிய சிந்தனைகள் விடிவுக்காய் புலராதுசாதனைகளை முறியடிக்க முனைவது வேடிக்கை தான். மனிதாபிமான அரசியல் சித்தாந்தம் நாட்டிலே நிலை கொள்ளும் வரை குழப்பமும்- திருகுதாளங்களும் நிகழவே செய்யும். மயிலே மயிலே இறகு போடு என்றால் போடாது. பிடித்துப் பிடுங்கும் நிலைதான் தோன்ற வேண்டுமா?

-அன்புடன் ஆசிரியர்

# ஆரோக்கிய வாழ்விற்கு வழிவகுக்கும்
# பூண்டின் மகத்துவத்தை நாளும் பேணுவோம்

**மருத்துவ விளக்கம்**

பூண்டு என்றும், வெள்ளைப்பூண்டு என்றும் வழங்கப்படும் இதனை 'ஹார்லிக்' என ஆங்கிலத்தில் அழைப்பதுண்டு. இச்செடியின் (அறிவியல்) பெயர் அல்லியம் சட்டைவம் ஆகும். மிளகு, சீரகம் போன்று பூண்டையும் அன்றாடம் நம் உணவில் சேர்த்து வருகிறோம். இப்பண்டங்கள் எதற்காக உணவில் சேர்க்கப்பட்டு வருகின்றன—அவற்றால் நமக்கு-நம் உடலுக்கு என்ன பலன்கள் கிட்டும் என்பதையும், பூண்டின் மருத்துவக் குணங்களையும் இக்கட்டுரையின் வாயிலாகத்தெரிந்துகொள்வோம்.

### பூண்டு ரசம்

பூண்டு ரசம் வைக்கத் தேவையான பொருட்கள்: பூண்டு 20 பல், திப்பிலி 2 கிராம், நறுக்குமூலம் 1கிராம் மிளகு 5 கிராம், சீரகம் 2 கிராம், மஞ்சள்த் தூள் அரைத் தேக்கரண்டி, துவரம் பருப்பு 2 தேக்கரண்டி, புளி ஒரு பெரிய நெல்லிக்காயளவு அல்லது தக்காளிப் பழம் ஐந்து (5)

புளியைக் கரைத்தோ அல்லது தக்காளிப் பழங்களைப் பிழிந்தோ இரண்டு தம்ளர் எடுத்துக் கொள்ளவும், பூண்டுப் பற்களின் மேல் தோலை நீக்கி வைத்துக்கொள்ளவும்; மற்ற மசால் வகையறாக்களைச் சிறிது நெய்விட்டு வாணலியில் பொன்னிறமாக வறுத்து எடுத்துக்கொண்டு அம்மியில் வைத்து அரைக்கவும். பூண்டைத் தண்ணீரில் நன்கு வேகவிட்டு பின்னர் கரைத்து வைத்துள்ள புளித்தண்ணீர் அல்லது தக்காளிச்சாறு விட்டு உப்பு மஞ்சள்த் தூள் சேர்த்துக் கொதிக்க விடவும். அது ஒரு தம்ளராக வற்றியதும், அரைத்த மசாலாப் பொருட்களின் விழுதை இரண்டு தம்ளர் நீரில் கலக்கி கொதிக்கும் புளி அல்லது தக்காளித் தண்ணீரில் ஊற்றவும், இரண்டு தரம் கொதி வந்தவுடன் இறக்கி வைத்துக் கொண்டு சாதத்துடன் சாப்பிடலாம். இவ்வாறு தயாரித்த பூண்டு ரசத்தைச் சாப்பிட்டால். உடல் வலி, அசதி போன்றவை நீங்கும். உடல் எடை கூடும். மேலும் கருத்தரித்த தாய்மார்களுக்கு பிரசவத்துக்குப் பின் பால் சுரக்கவும் உதவி புரியும்;

### தலைவலி, சளிக்கு

பூண்டு இரண்டுபல், மிளகு இரண்டு ஆகியவற்றைச் சிறிது தண்ணீர் விட்டு அரைத்து நெற்றியில் பற்றுப் போட்டால், தலைவலி, சளி போன்றவை விரைவில் குணமடையும்.

### உள் நாக்கு வளர்ச்சிக்கு

பூண்டு இரண்டுபல், மிளகு இரண்டு—இவற்றைச் சிறிது பசுவின் பால்விட்டு வெண்ணெய் போல் அரைத்து நாற்பது நாட்கள் தொண்டைக்குள் தடவி வந்தால், அறுவைச் சிகிச்சையின்றி உள்நாக்கு வளர்ச்சி குணமாகும்.

### இரத்த உற்பத்தி, இரத்த அழுத்தம் ஆகியவற்றுக்கு

தேவை—பூண்டு 10 பற்கள், 1 தம்ளர் பசும்பால், 2 தேக்கரண்டி சர்க்கரை—பாலில் உரித்த பூண்டுப் பற்களைப் போட்டு நன்கு வேக வைக்கவும், அதிலே சர்க்கரை அல்லது பனங்கற்கண்டைச் சேர்த்துக் கலக்கி பூண்டை எடுத்து மென்று தின்றுவிட்டுப் பாலையும் குடித்து வந்தால் இரத்தம் விருத்தியாகும், இரத்த அழுத்தமும் குறையும். பிரசவித்த பெண்களுக்கு பால் நன்கு சுரக்கும், அத்துடன் உள் நாக்கு வளர்ச்சியையும் கட்டுப்படுத்தும்.

### எளிய பிரசவத்திற்கு

ஆமணக்கெண்ணெய் 2 தேக்கரண்டி, பூண்டு—2, மஞ்சள்த் தூள் அரைத் தேக்கரண்டி—ஆமணக்கெண்ணெயில் பூண்டையும் மஞ்சள்த் தூளையும் போட்டுக் காய்ச்சி இளஞ்சூடாக இருக்கும் போது, இடுப்பு, அடிவயிறு, தொடை ஆகியவற்றில் தடவிய பின் சுமார் 10 நிமிடங்கள் கழித்து இளஞ்சூடான வெந்நீரில் வாரம் இரண்டு அல்லது மூன்று முறை எட்டு மாதங்கட்கு மேற்பட்ட கருத்தரித்த தாய்மார்கள் குளித்து வந்தால் சுகப் பிரசவமாகும். மேலும் கருத்தரித்த தாய்மார்களுக்கு ஏற்படும் கால் உளைச்சலும் நீங்கும்:

### வாய்வுத் தொல்லைக்கு

வாய்வுத் தொல்லை, பித்தம் ஆகியவை நீங்கி, நல்ல சீரண சக்தியடைய கீழ்க்கண்ட முறையைப் பின்பற்றவும்; 20 உரித்த பூண்டுப் பற்களை எலுமிச்சம் பழச்சாற்றில் ஊறவைக்கவும். அத்துடன் 5 பச்சை மிளகாய்களை நறுக்கி உரித் பூண்டுப் பற்களை எலுமிசம் பழச் சாற்றில் ஊறவைத்துக்கொண்டு தினசரி 2 முதல் 4 ஊறிய பூண்டுப் பற்களைச் சாதத்தில் சேர்த்துச் சாப்பிடவும்.

அரை ($\frac{1}{2}$) எலுமிச்சம் பழச் சாற்றில் இரண்டு பூண்டுப் பற்களை ஓர் இரவு முழுக்க ஊறவைத்து, காலையில் வெறும் வயிற்றில் போட்டு மென்று விழுங்கினால், வாயுத் தொல்லை நீங்கும்;

### இருமல், இழுப்புக்கு

இரண்டு தேக்கரண்டி பனங்கற்கண்டு, 1 தம்ளர் பசும்பால், பூண்டுப் பற்கள் 4,—பூண்டுப் பற்களின் தோலை நீக்கிவிட்டு, பாலில் வேகவைத்து நசித்து பனங்கற்கண்டைச் சேர்த்து இரவில் படுக்குமுன் குடித்துவர வேண்டும். இவ்வாறு தொடர்ந்து 3 வாரம் (21 நாட்கள்) குடித்து வந்தால், நல்ல பலன் கிடைக்கும்;

### சுஜாஸ்

வெள்ளைப் பூண்டு 6 பற்கள், வெற்றிலை ஒன்று, மஞ்சள் பொடி ஒரு தேக்கரண்டி, நல்லெண்ணெய் ஒரு தேக்கரண்டி—பூண்டை வெற்றிலையுடன் சேர்த்து நன்கு அரைத்து மஞ்சள்த் தூள், நல்லெண்ணெயுடன் கலந்து சொறி, சிரங்கு, படைஆகியவற்றின் மீது பற்றுப் போட்டு வந்தால் விரைவில் குணம் கிடைக்கும்;

### இரத்தக்கட்டி உடைய

பூண்டு பற்கள்—6, வெற்றிலை ஒன்று, மஞ்சள்த் தூள் ஒரு தேக்கரண்டி, ஆமணக்கெண்ணெய்ஒருதேக்கரண்டி பூண்டை அரைத்து மஞ்சள்த் தூளைக்கலந்து குழப்பிக் கட்டியின் மேல் தடவ வேண்டும். பின்பு, வெற்றிலையின் மேற் பாகத்தில் ஆமணக்கெண்ணெயைத் தடவி அதன் அடிப்பாகத்தை நல்லெண்ணெய் விளக்கில் வாட்டிப் பொறுக்கும் சூட்டில் கட்டியின் மேல் வைத்து மெல்லிய துணியை வைத்துக் கட்ட வேண்டும். இவ்வாறு தொடர்ந்து மூன்று நாட்கள் செய்துவந்தால் கட்டி பழுத்து உடைந்து விடும்,

### மூல நோய்க்கு

பொன்னாங்கண்ணிக்கீரையுடன் 10 பல் பூண்டையும், 1 பிடி பாசிப் பருப்பையும் சேர்த்து வேகவைத்துத் தினசரி சாப்பாட்டில் சேர்த்துச் சாப்பிட்டு வந்தால், மூல நோய் கொஞ்சம் கொஞ்சமாக நீங்கும்.

### இரத்த அழுத்தம் குறைய

10பல் வெள்ளைப்பூண்டை நசுக்கி, உச்சந் தலையில் வைத்துத் துணியால் மூடி, அதைத் தாடையுடன் சேர்த்துக் கட்டி வந்தால் இரத்த அழுத்தம் குறையும்:

பூண்டுச்சாறு காது வலி, காதினுள் ஏற்படும் கட்டி, சைத்தியம் போன்ற பிணிகளை நிவர்த்தி செய்யும். நாக்கின் உட்பகுதியில் பூண்டுச் சாற்றைத் தடவ மலக் கிரிமிகள் ஒழியும், இருமல் குணமாகும்.

வெள்ளைப்பூண்டு, கருஞ்சீரகம் ஆகியவற்றை நன்கு இடித்துத் தேனில் குழப்பிக் காலை, மாலை இருவேளையும் சாப்பிட்டு வந்தால், அண்டவாதம் குணமாகும்:

காது இரைச்சல் நீங்குவதற்கு வெள்ளைப் பூண்டையும் மொசுமொசுக்கையிலையையும் நைத்து துணியில் முடிந்து காதில் அடைத்துக் கொள்ள வேண்டும்:

வாயு காரணமாகஉண்டாகும் இடுப்புவலி 'நீங்கவெள்ளைப்பூண்டு, மிளகு ஆகியவற்றுடன் சிறிதளவு கடுகையும் சேர்த்து நன்கு அரைத்துக் காலை வேளைகளில் சாப்பிடுவது நல்லது.

பூண்டைப்பாலுடன்சேர்த்துக் காய்ச்சிக் காலையும், மாலையும் உணவுக்குப் பின் அருந்தி வந்தால், தாய்ப் பால் நன்கு சுரக்கும்; வாயு நீங்கும். கபம் கரையும். இது ஈசினோபிலியா சளிக்கும், இரத்தக் கொதிப்புக்கும் மிகவும் நல்லது. மேலும் மூக்கடைப்பையும் போக்கும்.

குழந்தைகளுக்குக் கபம் வெளியேற, சுட்ட பூண்டைத் தாய்ப்பாலில் உரைத்துக் கொடுக்கலாம்;

வெள்ளைப்பூண்டுத்தைலம் உடலில் உண்டாகும் அரிப்பைப்போக்கும், படைநோய்களைக் குணமாக்கும், காயங்கள் சீழ் பிடிப்பதைப் பூண்டு தடுக்கும். கொப்புளங்களையும் வேறு சில தோல் நோய்களையும் குணமாக்கும்.

பூண்டுச் சாற்றையும் இஞ்சிச் சாற்றையும், கலந்து அருந்திவர நெஞ்சுவலி குறையும். இரத்தத்தைச் சுத்தம் செய்யும் தன்மை பூண்டிற்கு உண்டு.

பூண்டை வெள்ளாட்டுப் பாலில் வேகவைத்து பூண்டுப் பற்களை மென்று தின்று பாலைக் குடித்து வந்தால் சீதக் கடுப்பு நீங்கும்;

வாயுத் தொல்லை நீங்க மருந்துக்கடைகளில் 'கார்லிக் பிபர்ல்ஸ்' என்ற உருண்டை வடிவ மாத்திரைகள் கிடைக்கும். அவற்றை உபயோகிக்கலாம். அம் மாத்திரையில் பூண்டில் உள்ள சத்துக்கள் யாவும் இருக்கும்; ஆனால் வேண்டாத நெடி வெளிப்படுவதில்லை;

வெள்ளைப் பூண்டை உரித்து அரைத்துப் பருக்கள் கட்டிகளின் மீது பற்றுப் போட அவை உடைந்து குணமாகும்;

5 கிராம் உரித்த பூண்டை 100 மில்லி நல்லெண்ணெயில் போட்டு அடுப்பிலிட்டு பழுக்கக் காய்ச்சி வடிகட்டி அதில் 2 அல்லது 3 துளிகள் காதில் விட்டால் காதுவலி குறையும். மார்பில் சளிக்கட்டு இருந்தால் மார்பின் மீதும் இதைத் தடவலாம், வாத வலியுள்ள இடத்திலும் இதைத் தடவலாம்:

### பிரசவித்த பெண்களுக்குப் பூண்டு லேகியம்

தேவை-சுக்கு 25 கிராம், திப்பிலி 5 கிராம், நறுக்கு மூலம் 5 கிராம், ஓமம் 2தேக்கரண்டி, சீரகம் 2 தேக்கரண்டி, வாயு விளங்கம் 2கிராம், கருப்பட்டி வெல்லம் 250 கிராம்.

வெல்லத்தைத் தவிர மற்ற மருந்து வகையறாக்களை வாணலியிலிட்டு லேசாக வறுத்துக் கொண்டு நன்கு இடித்துப் பட்டுப் போல் சலித்து எடுத்துக் கொள்ளவும். தோல் நீக்கிய பூண்டு 10 பற்களை 1 தம்ளர்பாலில் நன்கு வேக வைத்து மத்தால் கடையவும், இதில் கருப்பட்டியையும், பொடி செய்யப்பட்ட மருந்துப் பொருட்களில் ஒரு தேக்கரண்டியையும், இரண்டு தேக்கரண்டி நெய்யையும், ஒரு தேக்கரண்டி தேனையும் கலந்து கிளறி அதிகாலை 4 அல்லது 5 மணிக்கு பிரசவித்த பெண்களுக்கு வெறும் வயிற்றில் வாரத்துக்கு மூன்று முறை கொடுத்து வந்தால், இடுப்பு பலமடையும், பால் சுரக்கும். கர்ப்பப்பைக் கோளாறு ஏற்படாது. இதை உண்ட பின்பு 2 மணி நேரத்திற்கு தண்ணீர் குடிக்கவோ, சாப்பிடவோ கூடாது: ✶

## நயினை ஆடிப்பூர திருவிழா

நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்பாள் கோவில் ஆடிப்பூரத் திருவிழா நேற்று ஆரம்பமாகியது.

தொடர்ந்து 9 நாள் நடைபெறும். இத்திருவிழாவின்போது தினம் தோறும் விசேட அபிஷேகமும் பூசை வழிபாடுகளும் நிகழும்;

இறுதிநாளான ஆவணி மாத 1 ஆம்திகதி மூலமூர்த்தி அம்பாள் எழுந்தருளி வீதியுலாவரும் அலங்கார காட்சி இடம் பெறும்; (3)

## இழப்பீடு வழங்கல்

(கொழும்பு)

கடந்தகால யுத்தங்களின் போது உயிரிழந்த மற்றும் காணாமற் போனவர்களுடைய குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கும் நடவடிக்கையின் ஓர் பகுதியாக நேற்று அனுராதபுர மாவட்டத்தில் 165பேருக்கு 45இலட்சம்ரூபா இழப்பீடு வழங்கப்பட்டது;

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக்காலத்தில் காணாமற்போன 16 ஆயிரத்து 800 பேரின் குடும்பங்களுக்கு 468 கோடி ரூபா இதுவரை இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது; (உ)

## முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு சீருடை

(கொழும்பு)

கொழும்பு நகரின் பாதுகாப்புக்கருதி முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு விசேட சீருடைகளும் அடையாள அட்டைகளும் வழங்க பாதுகாப்புப் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது;

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# யாழ். குடாவில் புலிகள் ஊடுருவல்

# பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் விடுதலைப் புலிகள் பெருமளவில் ஊடுருவியுள்ளதாகக் கிடைத்த புலனாய்வுத்தகவலை அடுத்து குடாநாட்டின் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதுடன் படையினரும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். நகருக்கு மிக சமீபமாக விடுதலைப் புலிகள் ஊடுருவி இருப்பதாலும் தென்மராட்சியில் பெருமளவு பகுதி அவர்கள் வசம் இருப்பதாலும், புலிகளின் முன்னேற்ற நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்கே இந்த பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை புலிகளின் ஊடுருவலை முறியடிக்கத்தக்க வகையில் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட ஆட்லறிகள், மற்றும் பல்குழல் எறிகணைகள் ஆங்காங்கே பூட்டி வைக்கப்பட்டுள்ளதாகவும் திடீர் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [வ]

## நுண் அலைத் தொலைத்தொடர்பு பிரதம பொறியியலாளர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கும் வெளியிடங்களுக்குமான நுண் அலைத் தொலைபேசி இணைப்பின்மூலம் தொலைத்தொடர்பு வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் ஏககாலத்தில் வழங்க முடியாதிருப்பதால்நேர அட்டவணை ஒன்றின் மூலம் இணைப்புக்களை வழங்கவிருப்பதாக வடக்குக் கிழக்கு மாகாண ரெலிக் கொம் பிரதம பொறியியலாளரும் மேல் நிலை அதிகாரியுமான எஸ்.கனகசூரியர் வலம்புரிக்குத் தெரிவித்தார்.

நுண் அலைத் தொலைபேசி இணைப்புத் தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்:

1997 ஆம் ஆண்டு பரீட்சார்த்தமாக 400க்கும் குறைவானோருக்கு இணைப்பு வழங்கப்பட்டது ஆனால் தற்போதைய சூழ் நிலையில் 400 பேருக்கு இணைப்பு வழங்க முடியாதுள்ளது.

தொலைபேசி இணைப்பு பெறுபவர்களின் அத்தியாவசிய தேவைகளின் அடிப்படையில் அரசாங்க கூட்டுறவு கூட்டுத்தாபனங்கள், பாதுகாப்புப்படையினர் ஆகியோருக்கு முன்னுரிமை அடிப்படையில் தற்போது நுண் அலை தொலைபேசி இணைப்பு வழங்கப்படவுள்ளது.

இருந்தும் சகல வாடிக்கையாளர்களையும் திருத்திப்படுத்தும் வகையில் தொலைபேசிக்கட்டணபில் கிடைத்த 14 நாட்களுக்குள் பணம் செலுத்தியவர்களுக்கு தினமும் காலை 8 மணிமுதல் 11 மணிவரையும்.

★ பில்கிடைத்து ஒருமாதத்திற்குள் பணம்செலுத்தியவர்களுக்கு காலை 11 மணி முதல் பி. பகல் 2 மணிவரையும்.

★ ஒருமாதம் கடந்தபின் பணம் செலுத்தியவர்களுக்கு பி,பகல் 2மணி முதல் 5மணி வரையும்

★ காலதாமதம் செய்து பணம் செலுத்துபவர்களுக்கு பி.பகல் 5 மணிமுதல் 7மணி வரையும்,

★ இரவு 7 மணி முதல் அடுத்தநாள் காலை 7 மணி வரை ஒரு தொடர்பு என்ற அடிப்படையில் சகலருக்கும் இணைப்பு வழங்கப்படும்.

எனவும் தெரிவித்ததுடன் இதைத்தவிர ரெலிக்கொம் நிறுவனத்திற்கு வேறுவழி இல்லை எனவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

இதே வேளை பரிவர்த்தனை மூலம் 101 இலக்கத்திற்கு ஒரு இணைப்புக்குமேற்படாமல் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம் என்றும் வாடிக்கையாளர்கள் ஒழுங்காகவும் நேர்மையாகவும் ரெலிக் கொம் நிறுவனத்திற்கு பணம் செலுத்திஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (வ)

## அவுஸ்திரேலிய தூதுவர் வவுனியா அரசஅதிபரை சந்தித்தார்

கொழும்பில் உள்ள அவுஸ்திரேலிய தூதுவர் செல்வி மரியான் பேரலஸ்நேற்று வவுனியாவுக்கு விஜயம் செய்து வவுனியா அரச அதிபரைச் சந்தித்து வவுனியாவின் இன்றைய நிலைவரம் தொடர்பாகஆராய்ந்தனர்.

சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை நீடித்த இச் சந்திப்பின்போது வன்னியில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு, அகதிகள் பிரச்சினை, தமிழ்க்குழுக்களின் செயற்பாடுகள், அனுமதிப் பத்திரப் [பாஸ்] பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது. [வ]

## குண்டுச் சத்தம்

நேற்று இரவு 12 மணி முதல் பரவலான குண்டுச் சத்தங்கள் தென்மராட்சியை அண்டிய பகுதிகளில் இருந்து கேட்டவண்ணமிருந்தது. (ந-4)

### இறுதிக்கட்டப்...

விற்கு விடுக்கப்பட்ட அழைப்புத் தொடர்பாக அமைச்சர் டி.எம்.ஜெயரத்தின தகவல் தருகையில், இவ்வாரம் நடைபெறவுள்ள இறுதிக்கட்டப் பேச்சு வார்த்தையில் எதிர்க்கட்சித் தலை

### கொழும்பில்...

தில் இருந்து ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் அலரிமாளிகையைச் சென்றடைந்தது இதில் காணாமல் போன படையினரின் பெற்றோர் உறவினர்கள் மூவாயிரம் பேர்கள் கலந்து கொண்டனர்.

யுத்தக் கைதிகளை பார்வை இடுவதற்கு வன்னி செல்ல அனுமதிக்காவிட்டால் இராணுவக் கட்டுப்பாடற்றப் பகுதிக்கு கால் நடையாகச் செல்லவுள்

## வன்னியில் 'எயிட்ஸ்' நோயாளி மரணம்

(வவுனியா)

கிளிநோச்சி அக்கராயன் பகுதியில் முதலாவது "எயிட்ஸ்" நோயாளி ஒருவர் கடந்த 7ம் திகதி உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கராயன் அமைதிபுரத்தைச் சேர்ந்த, நான்கு பிள்ளைகளின் தந்தையான சின்னத்தம்பி சந்தானம் [வயது 53 என்பவரேஉயிரிழந்த "எயிட்ஸ்" நோயாளியாவார்.

மேற்படி நோயாளி வெளிநாட்டுக் கப்பல் ஒன்றில் வேலைபார்த்து விட்டு நாடுதிரும்பியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ-4)

### புலிகள்...

பத்திரிகையாளர் மகாநாட்டை நடத்தினார்.

டாக்டர் பெர்னாண்டோ பத்திரிகையாளர் மகாநாட்டில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

பொதுசன ஐக்கிய முன்னணி அரசினால் முன் வைக்கப்பட்டுள்ள தீர்வுப்பொதி இந்த நாட்டின் இனப்பிரச்சினையை ஒரு போதும் தீர்க்கப்போவதில்லை ஆனால்

## தப்பியோடிய படையினரில் இதுவரை ஐயாயிரம் பேர் கைது

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பி ஓடிய சுமார் 5000 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பாலித பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினரும் பொலிசாரும் கூட்டாக இணைந்து நடத்திய தேடுதலின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அனுராதபுர மாவட்டத்தில் மட்டும் 8 அதிகாரிகள் உட்பட 3500 படையினர் தப்பி ஓடியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### தேசியவீரர்தினம்

வவுனியாவில் இன்று தமிழ் தேசிய வீரர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இதனை ஒட்டி ரெலோ அமைப்பினர் வவுனியா நகரசபை மண்டபத்தில் இன்று மாலை கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

இக் கூட்டத்திற்கு வன்னி மாவட்ட எம். பி. அடைக்கலநாதன் (செல்வம்) தலைமை தாங்கவுள்ளார் வல்வெட்டித்துறை நகர சபைத் தவைர் என். சிவாஜிலிங்கம்' செயலர் வினோதலிங்கம், சட்டத்தரணி சிறிகாந்தா உட்பட பலர் உரையாற்றவுள்ளனர். [வ]

### சமாதான...

ஒருவர் தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் தூதரக அதிகாரி தொடர்ந்து கூறுகையில் அரசாங்கத்தின் புதிய அரசியல் யாப்பு நகல் திட்டத்தை அவசியம் ஏற்படும் பட்சத்தில் விடுதலைப் புலிகளிடம் முன்வைக்கவும் தமது அரசு தயாராக இருப்பதாக கூறினார். [வ-4]

### சனச...

வன்னி சென்று குடியேற அனுமதிக்குமாறு கோரியே சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டிருந்தனர்.

இவர்களின் சத்தியாக்கிரகம் தொடர்பாக வவுனியா மேலதிக அரச அதிபர் எஸ். ரகுநாதபிள்ளை கருத்துத் தெரிவிக்கையில் இந்த அகதிகள் வவுனியாவுக்கு அகதிகளாக வந்தவர்கள் என்றும் இவர்கள் முகாம்களிலேயே தங்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (வ)

### நாளைவிசாரணை

குருநகர் அரச களஞ்சியத் திருட்டு தொடர்பான முப்பத்தேழு சந்தேக நபர்கள் மீதான விசாரணை நேற்று யாழ் நீதிமன்றில் மூன்று மணிநேரமாக நடைபெற்றது.

குருநகர் இராணுவ முகாம் கட்டளை அதிகாரி கப்டன் அனுரா பிரசன்ன இலிங்கோண் சாட்சியம் அளித்தார்;

மீண்டும் வழக்கு விசாரணை நாளை நீதிமன்றத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்; (வ-71)

## இன்று கலந்துரையாடல்

வடபகுதியின் அபிவிருத் திட்டங்கள் தொடர்பாக வடபகுதி புனர்வாழ்வு அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம இன்று காலை மகாநாடு ஒன்றைக் கூட்டவுள்ளார்;

இதில் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு கிளிநொச்சி, மன்னார் அரச அதிபர்கள் கலந்து கொள்கிறார்கள். (வ)

### மல்வத்த...

என்று அரசின் உத்தேச அரசியல்சீர்திருத்தயோசனையை ஆட்சேபித்து அஸ்கிரிய மல்வத்த பீடாதிபதிகள் கூட்டாக ஜனாதிபதி, மற்றும் அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கு கடிதங்களை அனுப்பி உள்ளனர்.

இக்கடிதத்தில் மல்வத்த பீடாதிபதி ரம்புக்கல்லசிறி விபஸ்ஸி தேரர் அஸ்கிரிய

## இறுதிக்கட்டப்...

விற்கு விடுக்கப்பட்ட அழைப்புத் தொடர்பாக அமைச்சர் டி.எம்.ஜெயரத்தின தகவல் தருகையில், இவ்வாரம் நடைபெறவுள்ள இறுதிக்கட்டப் பேச்சு வார்த்தையில் எதிர்க்கட்சித் தலைவர் ,ரணில் விக்கிரம சிங்க கலந்து கொள்வார் என எதிர்பார்ப்பதாகஅமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சிங்கப்பூரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் புலிப்பிரமுகர் ஒருவருடன் ரணில் தொடர்பு கொண்டிருந்தார் என்ற அரசின் குற்றச்சாட்டைக் கண்டித்து அரசு- ஐ : தே . க பேச்சின் போது ரணில் வெளிநடப்புச் செய்தமைகுறிப்பிடத்தக்கது:

ரம் பேர்கள் கலந்து கொண்டனர்:

யுத்தக் கைதிகளை பார்வை இடுவதற்கு வன்னி செல்ல அனுமதிக்காவிட்டால் இராணுவக் கட்டுப்பாடற்றப் பகுதிக்கு கால் நடையாகச் செல்லவுள்ளோம் என ஊர்வலத்தின் போது வலியுறுத்திக் கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

---

## புலிகள்...

● தனேஸ் (கிட்ணன் காந்தன்) வவுனியா.

● லெப். சின்னராசன் (சரவணமுத்து ரசீகரன்) மட்டக்களப்பு. (ந-2)


# யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி

# விண்ணப்பம் கோரல்

2000 ஆகஸ்ட் மாதம் 01ம் திகதி ஆரம்பமாக இருக்கும் ''கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர சாதாரண பிரிவு'' பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தினை ரூபா 10/- செலுத்தி கல்லூரியில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவுத் திகதி 27-07-2000:

அதிபர்.

கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி,
இல. 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்: (கி 668)


டில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

பொதுசன ஐக்கிய முன்னணி அரசினால் முன் வைக்கப்பட்டுள்ள தீர்வுப்பொதி இந்த நாட்டின் இனப்பிரச்சினையை ஒரு போதும் தீர்க்கப்போவதில்லை ஆனால் இத் தீர்வுப்பொதி இனப் பிரச்சினையைத் தீர்க்கும் ஒரு சிறுபாலமாகவே அமையும்;

தற்போது நாட்டில் நிலவும் பிரச்சினைகளை முதலாளித்துவ கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியோ, பொதுசனஐக்கிய முன்னணியோ தீர்த்து வைக்க மாட்டாது. முதலாளித்துவ சக்திகளான இரு கட்சியினரும் தம்முடைய சொந்த வாழ்வை வளம்படுத்துவதில் அக்கறை காட்டி வருகிறார்களே ஒழிய நாட்டு மக்களின் நலனில்எத்தகைய அக்கறையும் காட்டவில்லை.

தமிழ் மன்னனான எல்லாளன் மீது துட்டகைமுனு வைத்திருந்த மதிப்பை போல் நானும் பிரபாகரன் மீது மதிப்பை வைத்திருப்பது மாத்திரமின்றி பிரபாகரனை எல்லாள மன்னனாகவும் மதிக்கின்றேன்.

சிங்கள தமிழ் முதலாளித்துவ வாதிகள் ஒன்றிணைந்திருப்பது போல் அவர்களை எதிர்க்கும் சக்திகள் ஏவரும் ஏன் ஒன்றிணைய முடியாது என்றும் பெர்னாண்டோ கேள்வி எழுப்பி உள்ளார்.

(வ)

கம் தொடர்பாக வவுனியா மேலதிக அரச அதிபர் எஸ். ரகுநாதபிள்ளை கருத்துத் தெரிவிக்கையில் இந்த அகதிகள் வவுனியாவுக்கு அகதிகளாக வந்தவர்கள் என்றும் இவர்கள் முகாம்களிலேயே தங்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (வ)

---

## கணித......

கலந்து சொண்டுள்ளனர்.

இப்போட்டியில் கலந்து கொள்வதற்கென தெரிவான மூன்று இலங்கை மாணவர்களில் கொழும்பு இந்துக் கல்லூரி மாணவன் உமாசங்கரும் ஒருவராவர்.

இம்மாணவர்களுக்கு இலங்கையின் பிரபல்யம் வாய்ந்த கணிதப் பேராசிரியர்களினால் பயிற்சி அளிக்கப்பட்ட பின்னரே இவர்கள் கணித ஒலிம்பிக்கில் கலந்து கொண்டனர். (வ)

---

## லங்கா...

தேவானந்தா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நேற்று தொடர்பு கொண்டுள்ளார்,

இதனை அடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் இக்கப்பல் சேவை விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கும் :'சிற்றி ஒவ் றிங்கோ'' பயணிகள் கப்பல் வாரம் ஒரு தடவையே சேவையில் ஈடுபட்டுள்வதால் பயணிகளின் நெருக்கடி குறையாமல் உள்ளது,

டாக ஜனாதிபதி, மற்றும் அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கி கடிதங்களை அனுப்பி உள்ளனர்.

இக்கடிதத்தில் மல்வத்த பீடாதிபதி ரம்புக்கல்லசிறி விபக்ஸி தேரர் அஸ்கிரிய பீடாதிபதி உடுகம்புத்த வஜ்ஜிர தேரர் ஆகிய இருவரும் ஒப்பமிட்டுள்ளனர்.

உத்தேச அரசியல் திருத்தம் தொடர்பான யோசனைகளை அமைச்சர் ஜி. எல். பீரிஸ் பீடாதிபதிகளுக்கு அண்மையில் விளக்கமளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது (வ)

---

## அமைச்சர்,.-

பிரமச்சாரியாவார்:

1994 ஆம் ஆண்டில் தொடர்புசாதன அமைச்சராக இருந்த இவர் 1996ல் விமானப் போக்கு வரத்துத் துறை அமைச்சராகவும் இருந்தார். பதினைந்து வருடங்களுக்கு மேலாக பாராளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்துள்ளார்.

இவரது இறுதிக் கிரியைகள் எதிர்வரும் சனிக்கிழமை அரச மரியாதைகளுடன் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

அமைச்சரின் மரணம் தொடர்பாக லண்டனில் உள்ள ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரின் பூதவுடல் இன்று அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும். [வ]


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு: யாழ்ப்பாணம்; எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.